


**93 - டிசம்பர் - ஜனவரி - 94**

விலை: 15-00

# விளக்கு

வாண்மை ஓங்க மாநிலம் சிறக்கும்

அகல்: 01 | ஸ்ரீமுக மார்கழி,-தை ★ திருவள்ளுவர் ஆண்டு : 2024 ★ ஜனவரி 1994 | சுடர் : 03


## கல்வியிலே தன்னிறைவு

இந்தப் புத்தாண்டிலிருந்து பிரதேசக் கல்விச்செ யலங்
கள் முழு அளவிற்செயற்படத்தொடங்கியுள்ளன. செறிவான
மேற்பார்வை, நுணுக்கமான கண்காணிப்பு. நியாயமான வளப்
பகிர்வு போன்றவற்றினூடாகப் பாடசாலைகளின் வினைத்
திறனை அதிகரிக்கச் செய்வதே இந்த அதிகாரப்பரவலாக்
கத்தின் பிரதான நோக்கமாகும்.

வரவேற்கின்றோம்.

நோக்கத்தைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு அது
சரியாகவும் விரைவாகவும் நிறைவேறுவதற்கு நேர்மையுட
னும் நிதானத்துடனும் அயராதுழைக்குமாறு சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதே வேளையில் மாணவர்களையும் பெற்றோரையும்
பெரிதும் பாதிக்கின்ற பாரிய பிரச்னையொன்றையும் சுட்டிக்
காட்ட விரும்புகின்றோம்.

நமது யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரை ஒவ்வோர்
ஊரிலும் ஆகக் குறைந்தது ஒரு பாடசாலையாவது இருக்
கின்றது. கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த நம்
முன்னோரின் தொலை நோக்கால், பரந்த சிந்தையால்
தியாகத்தால், சமூக முன்னேற்றத்தை இலக்காகக்கொண்டு
நிறுவப்பட்ட கல்விக்கூடங்கள், கலைக்கோவில்கள் அவை-
மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கு வித்தியாலயங்கள் அவர்

களின் வீட்டிற்கண்மையில் இருக்கவேண்டியது அவசியம் என்ற உண்மையை உணர்ந்ததின் விளைவுகள் அவை.

நாட்டின் பொதுக்கல்வித் திட்டத்தைப் பின்பற்றிய போதிலும், தத்தம் சூழலில் வாழும் மக்களின் நிலைக்கும் தேவைக்குமேற்றதாக, அத்திட்டத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி அவர்களின் அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்த இப்பாடசாலைகள் பல, இன்று தம் செயல் மறந்து செல்வாக்கிழந்து, பெயரளவில் மட்டும் 'பாடசாலை' களாக்காட்சி தருகின்றன.

இதனால், இவற்றிற் கற்கவேண்டிய மாணவர்கள் பலர் 'பிரபலம்'' பெற்ற, வசதிகள் நிறைந்த இரண்டொரு கல்லூரிகளை நாடி நெடுந்தூரம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஏற்படும் உடற்சிரமம், பொருட்செலவு, உளச்சிக்கல் போன்றவை தோற்றுவிக்கும் சமூக, பொருளாதாரத்தாக்கங்கள் பல.

பாடசாலைகளின் ''உள்வீட்டுப்பிரச்னைகள்'' மக்களாட்சியில் அனைவருக்கும் கல்வியை வழங்கவேண்டிய பெரும் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுவதற்காகவே பாடசாலைகள் அரசுடைமை ஆக்கப்பட்டன என்பதை அறியாத அரசியல்வாதிகள், தம் ஆதரவாளர்களுக்கு வேலை கொடுக்கும் நிலையங்களாகவும், தம் செல்வாக்கை நிலை நிறுத்தும் அலகுகளாகவும் பாடசாலைகளைக் கருதியமை, அரசியல்வாதிகளின் தாளத்திற்கேற்ப அதிகாரிகள் ஆடியமை போன்றவையே இப்பரிதாப நிலைக்குரிய காரணங்களாகும்.

இந்த இழிநிலை மாற்றப்படவேண்டும்.

அதிகாரிகளுக்கும் அதிபர்-ஆசிரியர்க்குமிடையேயுள்ள தூரத்தைக் குறைத்து, தாமதத்தையும் தவறுகளையும் தவிர்த்து, முன்னுரிமை அடிப்படையில் வளங்களைப் பகிர்ந்து கிராமப்புறப்பாடசாலைகளை மீண்டும் உயிர்ப்புடன் செயற்படவைத்து ஒவ்வொரு பிரதேசமும் கல்வியிற்தன்னிறைவு பெற வழிவகுக்க வேண்டியது பிரதேசக்கல்வி அலுவலக அதிகாரிகளின் பாரிய பொறுப்பாகும்.

பெரிய எதிர்பார்ப்புகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கொத்தணி முறை தோல்வியடைந்ததன் காரணங்களை நன்கு விளங்கிக்கொண்டால், நிர்வாகப் பரவலாக்கம் கல்வி வசதிகளையும் பரவலாக்கும் என்பது நிச்சயம்.

# கிராமப்புற மாணவனின் சாதனை

செல்வன் கணேஸ்வரன் பிரகாஷ், கந்தரோடை தமிழ்க் கந்தையர் வித்தியாசாலை - இன்று அகில இலங்கையிலும் புகழ் பெற்ற பெயர்களாகிவிட்டன. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசிற்பரீட்சையில் 190 புள்ளிகளைப் பெற்ற செல்வன் பிரகாஷின் இச் சாதனையால் இது சாத்தியமாகியுள்ளது.




க. பிரகாஷ்

'தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் முன்னைய அதிபர் திரு. அ. தற்பரானந்தன் அவர்களே எனக்கு ஏடு தொடக்கினார்கள். திரு. சி. முத்துக்கிருஷ்ணர் தமிழும் செல்வி க.பத்மினிதேவி கணிதமும் கற்பித்தார்கள். வித்தியாசாலைப் பழைய மாணவரான திரு. உதயகுமார் மேலதிக வகுப்புக்களை நடத்தினார். மாதிரி வினாத்தாள்களை வேறிடங்களிலிருந்து கொண்டுவந்து கொடுத்து விடை எழுதுவதிற் பயிற்சி பெறச் செய்தார். இப்போதைய அதிபர் திரு.க செல்வகுமாரன். படிப்பதற்கும் விளையாடுவதற்கும் தேவையான பொருள்களை எனது தந்தையார் திரு. கணேஸ்வரன் வாங்கிக் கொடுத்தார். இன்ன' இன்ன உதவிகள் என்று பிரித்துச் சொல்ல முடியாதபடி எல்லா உதவிகளையும் செய்து எப்போதும் என்னை ஊக்கப்படுத்தினார் அம்மா, 'செல்வரஞ்சனி எனக் குறிப்பிடும் பிரகாஷிடம் காணப்படும் நன்றியுணர்வும் குருபக்தியும் பணிவும் மேலும் பல சாதனைகளை அவர் புரியவும், ஏனைய மாணவர்கள் அவரைப் பின்பற்றவும் உந்துசக்தியாக விளங்கும் என நம்புகின்றோம்.

அவருக்கு நமது பாராட்டுக்கள்.

# முதலிடம் பெறுகிறார் வேம்படி மாணவி



**செல்வி சிவதர்சினி சிவசுப்பிரமணியம்**

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் 1993ல் நடத்திய க.பொ.த முன்னோடிப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்றுத் தேசிய மட்டத்தில் முதலிடத்திற்கு உயர்ந்துள்ளார் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சிவதர்சினி சிவசுப்பிரமணியம். அவருக்கு நமது பாராட்டுக்கள். சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்ஆரம்ப வகுப்புக்களிற் கற்ற போது, படிப்பிலே பிடிப்புஏற்படக்காரணமாயிருந்த ஆசிரியை திருவாட்டி நாகேஸ்வரி நாகராசா அவர்களையும் நல்ல முறையிற் கற்பித்து, உற்சாக மூட்டி வழிகாட்டி வரும் வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர், ஆசிரியைகளையும் நன்றியுடன் போற்றும் சிவதர்சினி, கல்வியில் மட்டுமல்லாமல், கலை விளையாட்டுத்துறைகளிலும் தன் திறமையை வெளிக்காட்டியுள்ளார். "கடையில் வாங்கும் பொருள்களைச் சுற்றிவரும் பத்திரிகைத்துண்டுகள், என்னைச் சந்திக்காமற் குப்பைத் தொட்டிக்குட் செல்வதில்லை; பரீட்சைக்குச் செல்வதற்கு முன், எனக்கு நானே பரீட்சை வைத்து புள்ளி வழங்கி, கையொப்பமிடுவது எனக்கு மிகவும் பிடித்த தொன்று" எனத் தனது வெற்றியின் இரகசியத்தை வெளியிடும் இவரை ஏனையோரும் பின்பற்றலாமே!

# இளமையிற் கல்வி

*பிஞ்சுள்ளங்களின் நிலையுணர்ந்து விருப்பறிந்து அவர்களிடம் கற்பவனைப்போல் "நடிக்கும்" ஆசிரியனே அவர்களின் ஆற்றல்களை வளர்க்கின்றான். இன்றைய பாலர் கல்வியின் முக்கிய அமிசங்களைத் தருகின்றார். ஊரெழு சி; சி. த, க. பாடசாலை அதிபர்.*

**இ. குலசிங்கம்**

பாலர் கல்வியின் நோக்கம் அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கு அத்திவாரமிடுவதாகும். இதன் விளைவே அவர்களின் எதிர்காலம். குழந்தைகளுக்கு வீடே சொர்க்கம். பெற்றார் உற்றாரின் உறவு, உள்ளத்துக்கு இதமான அன்பு, மனம் நிறைந்த காப்பு என்பவற்றைப் பிள்ளைகள் பெற்று வீட்டில் களிப்படைகின்றார்கள். இல்லத்தை அன்புப் பண்ணையாகவும்; குழந்தைகளை அப்பண்ணையில் வளரும் அன்புப்பயிர்களாகவும் ஆக்கிடும் பொறுப்புடையவர்கள் பெற்றோர்.

உற்ற வயதில் பாடசாலைகள் அவர்களை வரவேற்கின்றன. பாடசாலைகள் பிள்ளைகளது உடல் உள வளர்ச்சிக்குத் தீனி போடுகின்றன. சுவைக்கும் எதிர் காலச் செல்வங்கள் பாடசாலையைத் தமது வீட்டிலும் மேலானதெனக் கருதி அதன்மேல் பற்றுக் கொள்கின்றனர். இப்பற்றினை வளர்க்கும் பெரும்பணி ஆசிரியப்பணி. பாட சர்லைகள் வரண்ட பாலைவனமாகக் காட்சிதரின், அதன் வெம்மை தாக்கவே - பிள்ளைகள் தப்பியோடத் தயாராகின்றனர். கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் பின்னணியில் பாடசாலைகள் இருந்துவிடாதிருக்க முனைப்புடன் செயற்பட வேண்யடி பொறுப்பு ஆசிரியர்களாகிய எம்மைச்சார்ந்தது,

இன்றைய ஒன்றிணைந்த ஆரம்பக் கல்வித்திட்டம் வகுப்பறையைக் குழவிப் பூங்காவாகவும் அழகூறும் காட்சிக் கூடமாகவும் மாற்றியுள்ளது. ஆசிரியர் குழந்தையோடு குழந்தையாய் மாறி நிற்கும் காட்சி இனிமையானது; அர்த்தம் நிறைந்தது. தாய் மொழிக் கல்வியை யூட்டும் தாயாக ஆகிரியர்கள் பிள்ளைகளால் உணரப்படுகின்றார்கள்.

கனிமொழிக் கல்வி ஊட்டப்பட்ட நிலைமாறி ஆசி

ரியன் பின்னணியாக அமைந்து குழந்தையின், உடல், உள சமூக, சமய, இரசஞான, கைப்பணி வளர்ச்சியை உருவாக்கும் சிற்பியாகின்றான். குழந்தையின் ஆளுமை தானாக வளர்கிறது. இன்றைய ஆசிரியர் தான் தெரிந்துகொண்டவற்றை வகுப்பறையிற் புகுமுன் 'மறந்து' விடுகின்றார். பிள்ளைகளிடம் தான் கற்பவன் போல மாறி நிற்கின்றார். -வீட்டுக்குப் புறம்பான அனுபவத்தைப் பெற நாடிவரும் மாணவர்களின் மனதறிந்து ஒழுங்கு, பொறுப்பு, அழகுக்கவர்ச்சி, எண்ணோடெழுத்து எது என்பதை அவர்களைக் கொண்டே இனங் காண வைத்தல் ஆசிரியரின் பணியாகிறது. இதனால் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் தன்னம்பிக்கையும் மனத்திருப்தியும் அடைகின்றனர்.

'கேள்விகள்' பிள்ளைகளின் சொத்து; ஆராய்வதில் அவர்கள் விஞ்ஞானிகள்; ஆடல் பாடல்களில் அவர்களுக்குப் பெருவிருப்பு; பொருள்களைக்கையாள்வதில் ஒருதுடிப்பு; இவற்றை இன்றைய ஆரம்பக்கல்வி ஆய்ந்தறிந்து நெறிப்படுத்துகிறது. இதனால் பிள்ளைகளின் ஆக்கத்திறன் சிருஷ்டிக்கப்படுகிறது. சிருஷ்டி கர்த்தாவாக ஆசிரியர் காட்சியளிக்கிறார். ''வாழ்வு விளையாட்டென்பதே'' குழந்தைகளின் கருத்து. அவர்கள் கருத்துப்படி பாடசாலை வாழ்வு அமைய வேண்டும்; வீட்டில் ஆடிப்பாடி மகிழ்ந்த குழந்தைகள் பாடசாலைக்கு வந்ததும் தமது விளையாட்டு விருப்புணர்ச்சிகள் அண்டிக்கப்படாது தூண்டப்படுவது கண்டு பூரிப்படைவர். ''விளையாட்டு முறைக் கல்வி'' மூலம் போதனைகளும் சாதனைகளும் நிகழ்த்த வல்ல ஆசிரியர்களைப் பெற்ற பாடசாலைகள் குழந்தைமையக் கல்வியை வழங்குவதில் முனைப்புடன் செயற்பட முடிகின்றது.

உடலை உரமுள்ளதாக மாற்றுவதால் உள்ளம் செம்மையடைகிறது. உடல் முயற்சிகள் நிறையப் பெறும் பாடவிதானம் உடலுள வளர்ச்சியோடு சமூக உணர்வும், அனுபவமும் தருகின்றன. இளமையில் கற்றாங்கொழுகும் சுகாதாரப் பழக்க வழக்கங்களே பச்சை மரத்து ஆணிபோற் பதிந்து, வாழ்வோடுகலந்து நிலைத்து விடுகின்றன, சுகவாழ்வின் மனப்பாங்கினை வழங்கும் பாடசாலைகளை மாணவர்கள் மறப்பதில்லை.

கல்வியியலாளர் புறோபெல், மொன்றிசூரி அம்மையார் போன்றோரின் கனவுகளின் நிலைக்களனாக விளங்குகின்றன இன்றைய கல்விச்செயற்பாடுகள், ஆரம்பக்கல்வியிற் கலந்து விளங்கும் உளவியற் சித்தாந்தங்களைக் கற்றுணர்ந்த ஆசிரியர்கள் கையாளும் கற்பித்தல் முறைகள் பிள்ளைகளைக் கல்வியின் உயரிய இலக்குக்கு இட்டுச் செல்வதோடு தன்னலமற்ற சுயநம்பிக்கையுள்ள எதிர்காலத் தலைவர்களாக அவர்களைப் புடமிடும் என்பதும் நிச்சயம். □

# ஆசிரியர்— மாணவர்

*கல்வி, நல்ல பண்புகள் நிறைந்த பூரணமான மனிதரை உருவாக்க வேண்டுமெனில் ஆசிரியர் மாணவர் உறவு சீராக இருத்தல் அவசியம். இது சம்பந்தமாக நமது பாரம்பரியக் கல்வி முறையிலுள்ள நல்ல மிசங்களை இன்றையகல்விச் செயற்பாடுகளுடன் இணைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் கட்டுரையாளர்.*

**வித்துவான் க. சொக்கலிங்கம் M. A,**

கண்ணபிரான் கடவுள் அவதாரம்; கீதாசாரியன்; தனது பாலப்பருவத்திலேயே தெய்வீக லீலைகளால் மக்களின் நெஞ்சங்களிலே கோயில் கொண்டவன். எனினும் தான் வாழ்ந்த காலத்தோடும் சூழலோடும் பழக்கவழக்கங்களோடும் தன்னை இணைத்துக் கொண்டு மக்களில் ஒருவனாகவும் தன்னை இனங்காட்டியவன். உரிய பருவத்திலே சாந்தீபமுனிவரின் ஆசிரமம் சென்று குருகுலவாசம் செய்து, கல்வி கற்கவும் அவன் தயங்கவில்லை. அந்தக் குருகுல வாசத்தின்போது அவனுடைய சகமாணவன் சுதாமா. அவனுடைய ஏழைமைக்கு அறிகுறி, இனித் தைப்பதற்கே இடமில்லை என்று சொல்லுமளவிற்கு நைந்த உடை. இதனால் அவன் 'குசேலன்' எனப்பட்டான்.

கண்ணன் அரச குமாரன். குசேலனோ பரமஏழை, ஆனால் சாந்தீப முனிவருக்கும் அவர் பத்தினிக்கும் இருவரும் பிள்ளைகளே. பெற்றோரின் அன்புக்கு எள்ளளவும் குறையாத அன்பை அவர்கள் அந்த இருவரிலும் செலுத்தி வந்தனர்.

சாந்தீப முனிவரின் ஆசிரமம் நாட்டுக்கும். காட்டுக்கும் இடையிலான எல்லைப் புறத்தில் இருந்தது. அவரின்நாளாந்த வேள்வி வழிபாட்டிற்கும் சமையற்காரியங்களுக்கும் காடுசென்று விறகு கொண்டுவருவது கண்ணனுக்கும் சுதாமாவிற்கும் இடப்பட்ட பணிகளுள் ஒன்று.

ஒரு நாள் அவர்கள் விறகுக்காகக் காடு சென்ற பொழுது அடைமழை பிடித்துக் கொண்டது. தொடர்ந்து மூன்று நாள்

கள் இடைவிடாது வானமே கிழிந்து விட்டதோ என்று நினைக்கும் அளவிற்குப் பயங்கர மழை: அவர்களால் ஆசிரமம் திரும்ப முடியாத நிலை. அந்நிலையிலும், குருவும் பத்தினியும் விறகின்றிச் சமையல் செய்ய முடியாது பட்டினி கிடப்பார்களே என்ற கவலைதான் அவர்களைப் பீடித்தது. மலைக் குகையொன்றிலே ஒதுங்கிய வண்ணம், எப்போது மழைவிடும்; எப்பொழுது ஆசிரமம், திரும்புவோம்; என்று பதைபதைப் போடும் ஆவலோடும் காத்திருந்தார்கள்.

சாந்தீப முனிவருக்கும் அவர் பத்தினிக்கும் 'பிள்ளைகள் திரும்பவில்லையே, கேவலம் விறகிற்காக அவர்களை இந்தக் கொடிய பருவ காலத்திலே அனுப்பி வைத்தோமே என்ற கவலையும், பசி, பட்டினி, தூக்கமின்மை, களைப்பு, குளிர்க் கொடுமை என்பவற்றால் அவர்கள் அடையக் கூடிய துன்பம் பற்றிய பயமும் சேர்ந்து அவர்களை ஆற்றொணாக் கவலையில் ஆழ்த்தின. அன்னம் தண்ணீரின்றி அயராத கண்ணோடு, கண்ணனும் சுதாமாவும் திரும்பி வரும் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தார்சுள்.

நான்காம் நாள் விடிந்தது. மழையின் கொடுமைக்கு ஆற்றாது வானத்துள் மறைந்திருந்தவன் வெளிப்பட்டதுபோலச் சூரியனும் வெளிப்பட்ட வேளையில், பிள்ளைகள் தம் தலைகளிலே சுமந்த விறகுக் கட்டுகளோடு ஆசிரமம் திரும்பினார்கள். முனிவரும் பத்தினியும் அவர்களைக் களிப்புடனும் கரையில்லாப் பாசத்தோடும் தழுவிக் கொண்டார்கள். சாந்தீப முனிவர், ''பிள்ளைகளே, உங்களின் குருபத்தி ஒன்றே உங்களுக்கு வேண்டிய கல்வி அனைத்தையும் வழங்கி விட்டது. இனி என்னிடம் நீங்கள் கற்க ஒன்றுமில்லை. நாளையே நீங்கள் உங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்லலாம்'' என்று அவர்களை மனங்கனிந்து ஆசீர்வதித்தார்.

இராமனும் அவன் தம்பிமாரும் கண்ணபிரானைப் போலவே தங்கள் குருவாகிய வசிட்ட முனிவரின் ஆசிரமம் சென்று அவரைப் பணிந்து கற்க வேண்டியவற்றைக் கற்றார்கள்.

சென்ற நூற்றாண்டுவரை குருகுலக்கல்வியும், அதன் வழியிலே திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியும் தொடர்ந்தன. ஆசிரியரை மையமாகக்கொண்டு கல்வி நிகழ்ந்தமையால், கற்றுக் கொடுத்தல் (படித்துக் கொடுத்தல்) என்ற சொற்றொடரும் தமிழில் அமைவதாயிற்று. தாம் பெற்ற அறிவை ஆசிரியர் மாணவருக்கு வழங்க, அவர்கள் அதனைப் பெறுகின்றனர் என்ற நம்பிக்கை பழமையான கல்வி முறையில் நிலவி வந்தமைக்கு, கற்பித்தலை 'ஈதல்' என்றும் கற்றலைக் 'கொள்தல்' என்றும் வழங்கியமை சான்றாகும்.

ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பில்.



கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக் கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.

என்ற தொல்காப்பியம் சிறப்புப் பாயிர அடிகளிலுள்ள ஈதல் கொடுத்தல் என்பவற்றிற்குக் கற்பித்தல் எனவும் கொள்வர் என்பதற்குக் கொள்ளுமாறு எனவும் நச்சினார்க்கினியர் உரைகண்டுள்ளார். கொள்வோன் என்பது மாணவனைக் குறிக்கும்.

ஈதல் இயல்பே இயம்புங் காலை

கோடல் மரபே கூறுங்காலை

என நன்னூல் பொதுப் பாயிரம் கூறுகின்றது. கோடல்- கொள்தல்.

மாணவரைப் பூரண மனிதராக்கினார் ஆசிரியர். இதனாலேயே எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என ''வெற்றிவேற்கை'' யில் அதிவீரராம பாண்டியரும் கூறினார். எழுத்து என்பது மொழிசார்ந்த இலக்கண இலக்கியஞ்சார்ந்த அறிவுத் துறைகளை மட்டுமன்றி ஆன்மீகத்தையும் உள்ளடக்கி விளங்கியது. இதனோடு எண்ணாகிய கணக்கு முதலாம் அறிவுசார் துறைகளும் கற்பிக்கப்பட்டமைக்கு ஆசிரியர் கணக்காயன் என்ற பெயரால் அழைக்கப்பட்டமையும் சான்று.

ஆசிரியர் - மாணவர் உறவு தந்தையர் - மக்கள் நிலையில் இருத்தல் நல்லதே. எனினும் தந்தையிற் செலுத்தும் பயபக்தியிலும் ஒருபடி கூடுதலாய் ஆசிரியனிற் செலுத்து பயபக்தி இருத்தல் வேண்டும் என்பதும் பழைய மரபுவழிக் கல்விமுறையில் எதிர் பார்க்கப்பட்டது,

அழலின் நீங்கான் அகலான் அஞ்சி

நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு

எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறன்

அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே

(நன்னூல் பொதுப்பாயிரம் 47)

''நெருப்பிலே குளிர் காய்பவர் அதனை மிக நெருங்காமலும், அச்சத்தால் மிக விலகிச் செல்லாமலும் குளிர்காய்வது போல ஆசிரியரை விடாது பின் தொடர்ந்து, அன்பு நிறைந்த மனத்துடன் எல்வாறு நடந்தால் ஆசிரியர் மகிழ்வாரோ அவ்வாறு நடந்து தருமவழியிலே மாறுபடாது அவரை வழிபட்டு மாணவர் ஒழுகுதல் வேண்டும் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

ஆனால் இத்தகைய அச்சமும் வழிபாடும் எத்தகைய ஆசிரியர் மீது உண்டாகும்? இக்கேள்விக்குத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையும் நன்னூல் பொதுப்பாயிர நூற்பாக்களும் உரையும் சிறந்த விளக்கம் தருகின்றன.

நல்ல ஆசிரியன் நற்குலத் தோன்றலாயும் (குலம் என்பது

சாதியைக் குறிக்காது. நல்ல பண்புகள் வாய்ந்த குடும்பத்தில், பரம்பரையில் தோன்றியவன் என்றே கொள்ளல் வேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் உடையவனாயும், பெருந்தன்மை பூண்டவனாயும் நூல்களிலே நிறைந்த தெளிவும் தேர்ச்சியுங் கொண்டவனாயும் தான் அறிந்தவற்றை ஒழுங்குபடுத்தி மாணவர் கொள்ளத் தக்கவகையில் விளக்க வல்லவனாயும், நிலம்போலப் பொறுமையும் தராசுபோல நடுவுநிலையும், மலர்போல எப்பொழுதும் முகமலர்ச்சியும், மலைபோல அளக்கவியலாத அறிவும், அசைவில்லாத உறுதியும், உலக அனுபவமும் வாய்ந்தவனாயும் விளங்குவான்.

'பாடம் சொல்வதில் விருப்பமின்மையும் இழிந்த குணவியல்புகளும், பொறாமை, பேராசை வஞ்சகம், பயம் உடைமையும், படித்த முறையிலல்லாது தெரிந்தவற்றையெல்லாம் கழற்காய் திணித்த குடம்போலத் திணித்தலும் வடவிப்பனையில் ஏறமுடியாததுபோல மாணவர் அணுகிக்கற்கக் கூடாத கடினத் தன்மையும் தான் மிகவும் கடினமாகக் கற்றவற்றை அவ்வாறே கடினமாக (பருத்திக் குடுக்கை போல)க் கற்பித்தலும் யாரோ உலவ வேறு யாருக்கோ பயன் தரும் வளைந்த தெங்குபோல விளங்குதலும் நல்லாசிரியன் அல்லாதவனது இலக்கணங்களாகக் கூறப்படுகின்றன" (நன் பொதுப் பாயிரம் 26 . 35)

இவைபோலவே நன்மாணாக்கனின் இலக்கணங்களும் தரப்பட்டுள்ளன.

"ஆசிரியன் ஒருவன் தன்னுடைய மகன், தன ஆசிரியனின் மகன், அரசனின் மகன், கற்பதற்குச் சம்மானமாக மிகுதியான பொருள் வழங்குபவன், தன்னை வழிபடுபவன், கற்பிப்பவற்றை விளங்கி மனத்தில் கொள்ளும் திறமையாளன் ஆகியோரைத் தன்மாணாக்கராய் ஏற்கலாம்.

இம்மாணாக்கர் முத்திறத்தினர்.

நீரை நீக்கிப் பாலைக் கொள்ளும் அன்னம்போல ஆசிரியர் சொல்வனவற்றில் நல்லவற்றை, பயனுள்ளவற்றை மட்டுமே தெரிந்து கற்போர், இரை மீட்கும் பசுப்போல ஆசிரியரிடம் கற்றவற்றை மீட்டல் செய்வோர் நன்மாணாக்கர். முதன் மாணாக்கரும் இவர்களே.

உழவன் பாடுபட்டுப் பயன் பெறும் நிலத்தைப் போல ஆசிரியரின் பாடுகளின் அளவுக்கே பயன் கொள்வோர், ஆசிரியர் சொன்னவற்றைக் கிளிபோல எழுத்துக்கு எழுத்துத் தவறாது ஒப்புவிப்போர் இடைப்பட்ட சாதாரணதரத்தினர். இடை மாணாக்கர்.



அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளாடு புல்லைக் கடிப்பதுபோல அரையுங் குறையுமாகத் தெரிந்து வைப்பவர், எருமைபோல ஆசிரியர் சொல்வது எதுவும் செவியிலோ மனத்திலோ ஏறப்பெறாதவர், பன்னாடை அழுக்குக்களைத் தேங்க வைத்து நல்ல சாரத்தை வெளிவிடுவதுபோல ஆசிரியர் கற்பித்தவற்றில் வேண்டியவற்றை விலக்கி வேண்டாதவற்றைமனத்தில் வைத்திருப்போர், கள்ளுண்டு களிப்பவர், சோம்பேறிகள், போலி மானம் மிகுந்தவர், காம உணர்ச்சி மிக்கவர், கள்வர், நோயாளர், வறியவர், குதர்க்கம் பேசுபவர், சினங்கொள்வோர், கற்பிக்கையில் நித்திரை கொள்வோர், மந்தமான மூளையுடையவர், நூல்களின் கடினத்தன்மைக்கு அஞ்சி அவற்றைக் கற்கத் தடுமாறுபவர் ஆகியோர் மூன்றாம் தரத்தினர், கடைமாணாக்கர். இவர்கள் மாணாக்கராகத் தகாதவர் என்று நன்னூல் விலக்குகிறது (நன்னூல் 37- 39).

இது மக்களாட்சிக்காலம் எல்லாப் பிள்ளைகளும் கல்விகற்கும் உரிமை உடையவர்கள். இவ்வுரிமை எவருக்கும் மறுக்கப்படக்கூடாது என்பது ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை மிகமிக நியாயமானதே. ஆசிரியரையோ, பாடங்களையோ மையங்களாகக் கொள்ளாது மாணவரையே மையமாகக் கொண்ட கல்விமுறை கல்வித்தத்துவத்தில் முதன்மை பெற்றுள்ளமை பாராட்டத் தக்கதாகும். எனினும் வளர்முக நாடுகளிலே இம்மூன்று மையங்களும் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட்டு விட்டன என்றோ, 'மாணவர் மையக் கல்வி' முற்றுமுழுக்கக் கையாளப்படுகின்றதென்றோ உறுதியாகக் கூறவியலாதுள்ளது. இன்றும் பாடசாலை புகாப்பருவப் பிள்ளைகளுக்கான கல்வி நிலையங்களிலே, 'ஆனா' இம்மன்னா மாவன்னா அம்மாவும் 'ஈரிரண்டு நாலும்' உரத்த குரலிலே கத்தப்பட்டு வருவதை தெருக்களிகல செல்லும்போது கேட்கக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் இன்னமும் கரண்டியூட்டல் முறைமை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உயர்தரவகுப்புக்களிலே குறிப்பு வழங்கலும் தேர்வு வினாவிடைகளைச் சொல்வதெழுதலாய் எழுதுவித்தலும் முற்றாக நின்று விடவில்லை. கல்வித்தத்துவங்கள் வாய்ச்சொல்லளவில் பேசியும் எழுதியும் வரப்படுகின்றனவேயன்றிச் செயலில் 'பழையகுருடி' கதைதான். 'தேர்வுமையக்கல்வி'யும் (Exam oriented Education) கல்வியின் இறுதியிலக்கு, பட்டமும் பதவியுமே என்ற குறிக்கோளும் அரியணையேறி ஆட்சி செய்வதைத்தான் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

இவற்றினிடையே கடந்த அக்டோபர் மாதத்தில் ஆசிரியர் தினம் மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டமை ஈழத்துக் கல்

வித்துறையிலே புதியதொரு திருப்பு முனையாய் அமையும் என்று நம்புவோம். மரபுவழிக் கல்வியிலே எவ்வளவோ மாற்றங்கள் வேண்டியவைதாம். அவற்றிலும் குறைபாடுகளுண்டு என்பவற்றை நாம் ஏற்றுக் கொண்டாலும் ஆசிரியர் மாணவர் உறவு பற்றிய நல்லமிசங்களை நாம் பயன்செய்வது தவறில்லை என்றே நம்புகிறேன்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் அமைதியின்மையும், வேலைநிறுத்தங்களும்வன்செயல்களும் நிலவுவதற்கான காரணிகளை ஆராய்ந்த அறிஞர் ஒருவர் கூறுவதன் சாரம் இது.

1. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே இணைந்த தொடர்போ பெற்றோரின் வழிகாட்டலோ இன்மை,

2. ஒழுக்கரீதியான கட்டுப்பாடுகளோ விதிகளோ நெகிழ்ச்சியடைந்து பயனற்றவை என்று புறக்கணிக்கப்பட்டு 'எதுவும் செய்யலாம்' என்ற மனநிலை வளர்ந்துள்ளமை.

3. சமயத்தின் அடிப்படையான தேவையும் பயனும் உணரப்படாமல் அதன் புறநிலைச் செயற்பாடுகளையே தேவாலயங்கள் வற்புறுத்திவருதல்.

4. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மாணவருக்கு விரிவுரைகளாற்றுவதிலும்பார்க்க தங்கள் சொந்த அறிவியல் சார் ஆய்வுகள், பரிசோதனைகள் மூலம் கூடிய வருவாய் பெறுதலில் கவர்ச்சி கொண்டிருத்தல்,

5. வெகுசனத் தொடர்புக்கலாசாரமும், பயங்கர ஆயுதப் பரிசோதனைகளும் அவற்றின் செயற்பாடுகளும் தனிமனிதப் பெறுமானத்தினை அலட்சியப்படுத்தி வருதல் (Revolt on the Campus Roderic Macleish - Readers Digest ,July-1966).

இவற்றில் சிலவாவது சிறிய அளவிலாவது எமதுகல்விச் செயற்பாடுகளைப் பாதித்து வருகின்றன. என்ற உண்மையை நாம் நினைவு கூர்வதோடு எமது பாரம்பரியக் கல்வி முறையில் நல்லனவற்றை ஏற்கவும் மனங்களைத் தயார் செய்து கொள்வது நல்லது.

---

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

---

# வாத்தியார் அழுதார்

*பல்லாண்டுகளுக்கு முன்னர் பாடசாலை மாணவர்கட்கு இலவச மதிய போசனம் வழங்கிய அரசு, திடீரென்று அதை நிறுத்திவிட்டது. பிரபல எழுத்தாளர் 'வரதர்' அவ்வமயம் 'ஆனந்தன்' இதழின் ஆசிரியத்தலையங்கமாக எழுதிய சிறுகதை இது. விலைவாசிகள் விண்வெளிக்குப் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளையில் இலவச மதிய உணவு முத்திரை விநியோகத்திற் செய்யப்பட்டுள்ள மாற்றத்தை மனத்திலிருத்தி இக்கதையை வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்*

★ வரதர்

பள்ளிக்கூடம் விடுகிற நேரம். நாலாம் வகுப்புக்குக் கடைசிப் பாடம். வரைதல். முருகேசு உபாத்தியாயர் கரும்பலகையில் ஒரு பெரிய பூசினிக்காயின் படம் வரைந்திருந்தார். அதைப் பார்த்து மாணவர்கள் கொப்பிகளில் வரைந்து கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் அந்த வகுப்பிலேயே முதலாம் பிள்ளை. அவனுடைய ஆட்டுப்புழுக்கைப்' பென்சிலாலே ஒருமாதிரி பூசினிக்காய்க்கு உருவம் போட்டுவிட்டான். அதன் ஒருபக்கம், மற்றப் பக்கத்திலும்பார்க்க கொஞ்சம் வண்டி வைத்து விட்டாற் போலிருந்தது. அழித்துக் கீறலாம் என்றால் அவனிடம் றப்பர் இல்லை. பக்கத்திலிருந்த தாமோரி' யிடம் இரவல் கேட்டான். தாமோரி, தன்னுடைய பெரிய, ஆர்ட்டிஸ்ற் றோயிங்' கொப்பியிலே புத்தம் புதிய வீனஸ் பென்சிலால், பூசினிக்காயென்று நினைத்துக்கொண்டு பனங்காய் மாதிரி ஏதோ ஒரு உருவம் போட்டுக் கொண்டிருந்தான். சுந்தரம் வடிவாகக் கீறியிருப்பதைப் பார்க்க அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஒரு பக்கம் கொஞ்சம் வண்டியாக இருப்பதையும் சுந்தரம் அழித்துத் திருத்துவதை அவன் பொறுப்பானா? ''போடா! என்னுடைய றப்பர் தேய்ஞ்சு போம்; நான் தரமாட்டேன்'' என்றான்.

சுந்தரம் விரலாலே சாடையாக எச்சியைத் தொட்டு, பிழையான கோட்டை அழிக்க முயன்றான். இது கூடப் பொறுக்கவில்லை தாமோரிக்கு. டக்கென்று எழுந்து ''வாத்தியார்!'' என்று ஒரு பெரிய சத்தம் போட்டான்.

மத்தியான இலவச போசனத்தை அரசாங்கத்தார் நிறுத்தப் போவதைப்பற்றிப் பத்திரிகையிலே வாசித்துக் கொண்டிருந்த உபாத்தியாயர், தாமோரி போட்ட சத்தத்தால் நிமிர்ந்து ''என்னது?'' என்றார்,

''வாத்தியார், இங்கே சுந்தரம் .......... எச்சிலைத் தொட்டுப் படத்தை அழிக்கிறான்!''

முருகேசு உபாத்தியாயர் அந்த ஊர் மனுஷர்தான். அவருக்குப் பணக்கார வீட்டுப் பிள்ளையான தாமோரியையும் தெரியும்; தந்தையை இழந்தவுடன் ஏழைப் பிள்ளையாகிவிட்ட சுந்தரத்தையும் தெரியும். அதோடு இருவரின் குணத்தையும் நன்றாக அறிவார்.

''இங்கே வா சுந்தரம்!'' என்றார்.

படபடக்கும் நெஞ்சோடும், அதைப் பிரதிபலிக்கும் முகத்தோடும், இயற்கையாகவே மெலிந்த உடம்போடும் சுந்தரம் வந்தான்.

''நீ எச்சில் தொட்டு அழித்தாயா?''

சுந்தரம் பதில் சோல்லு முன்பே தாமோரி எழும்பி, ''நான் பார்த்தேன் வாத்தியார்!'' என்றான்.

''நீ இரடா அங்கே! உன்னை யாரடா கூப்பிட்டது?'' என்று விழித்துப் பார்த்த உபாத்தியாயரின் கண்ணில் பொறிபறந்தது! அதைப் பார்த்ததும் சுந்தரத்தின் உடம்பு பதறத்தொடங்கி விட்டது.

ஆனால் திரும்பிச் சுந்தரத்தைப் பார்த்த உபாத்தியாயரின் முகத்தில் கருணை தவழ்ந்தது ''இங்கே வா, சுந்தரம்'' என்று அவனைப் பக்கத்தில் கூப்பிட்டு முதுகில் லேசாகத் தட்டினார். ''நீ எச்சில் போட்டாயா?'' என்றார்.

''என்னிடம் றப்பர் இல்லை வாத்தியார்: அம்மாவிடம் காசும் இல்லை!'' என்ற சுந்தரத்தின் கண்ணில் நீர் நிறைந்து விட்டது.

''றப்பர் இல்லாவிட்டால் எச்சில் போடக் கூடாது......'' என்றார் உபத்தியாயர். ஆனால் வேறு என்ன செய்யச் சொல்லலாம் என்று யோசித்தவருக்கு ஒருயோசனையும் ஓட வில்லை. குனிந்து பார்த்தவர் சுந்தரத்தினுடைய கால் சட்டைப் பையுக்குள்ளே என்னவோ மொத்தமாகத் தள்ளிக்கொண்டு கிடப்பதைக் கவனித்தார்: ''கால் சட்டைப்பையுக்குள்ளே என்ன வைத்திருக்கிறாய்?'' என்றார்.

சுந்தரம் பரிதாபமாக உபாத்தியாரைப் பார்த்தான் அந்தப் பார்வை அவரை என்னவோ செய்தது. ''ஏன்பயப்படுகிறாய்? நீ நல்ல பையன்; பிழையான காரியம் செய்யமாட்டாய்' பயப்படாமல் சொல்லு!'' என்றார்.

சுந்தரம் அப்போதும் பதில் சொல்லவில்லை. தலையைக்குனிந்தான். பொல பொல வென்று நாலு சொட்டுக் கண்ணீர் அவன் காலடியில் விழுந்தது. உபாத்தியாயர் அவனைக் கிட்ட இழுத்து



முதுகைத் தடவிக்கொடுத்து ''அழாதே சுந்தரம், அதற்குள்ளே என்ன ''புத்தகமா?'' என்றார்.

சுந்தரம் 'இல்லை' என்று தலையசைத்தான். துடித்துக் கொண்டிருந்த உதடுகளைக் கஷ்டத்துடன் திறந்து மெதுவாக,''வாத்தியார்...... அது...... அது ...... கொஞ்சம் பாண்!'' என்றான்.

''ஏன் நீ சாப்பிடவில்லையா? ......... பசிக்கவில்லையா?''

''கூப்பன் அரிசி விலை கூடிப் போச்சென்று அம்மா அரிசி வாங்கவில்லை. வீட்டிலே இருக்கிற தங்கச்சிக்குச் சாப்பிடக் கொடுக்கத்தான் அதை வைத்திருக்கிறேன்......

'நீ போ சுந்தரம்' என்று உபாத்தியார் சொல்லவில்லை; அவரால் சொல்ல முடியவில்லை. 'அண்ணை பள்ளிக் கூடத்தால் வரும்போது பாண் கொண்டு வருவார் என்று, பசியோடு வழி பார்த்திருக்கும் அந்த மூன்று வயதுக் குழந்தையின் வயிறுமல்லவா இனிமேல் துடிக்கப் போகிறது!' சுந்தரத்தைப் போகும்படி தலையசைத்து விட்டு' உபாத்தியாயர் சால்வைத் தலைப்பினால் தமது கண்களை ஒற்றிக் கொண்டார்.

'சுந்தரம்!...... உன்னைப் போல எத்தனை சுந்தரங்கள்!'

## மிகச் சிறந்தவன்

ஒன்றுந் தெரியாதவனிலும், எழுத, வாசிக்கத் தெரிந்தவன் சிறந்தவன்; நல்லவற்றை வாசிப்பவன் அவனிலுஞ் சிறந்தவன்: எழுதுபவற்றைக் கோவைப்படுத்தி நூலாக்குபவன் அவனிலுஞ் சிறந்தவன்; இவர்களுக்குக் கற்பித்து, இவர்களை நெறிப்படுத்தும் ஆசிரியன், அனைவரிலும் மிகச் சிறந்தவன்.

**பண்டிதர் ச.ப. சர்மா**

இலக்கியப் பேரவையால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில்.

# பாடசாலைக் கல்வி முறைமை - ஒரு விமர்சனம்

*மாணவர்க்குப் பூரணமான கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் பின்தள்ளப்பட்டு, தேசிய மட்டப் பரீட்சைகளிற் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுப் புகழீட்ட வேண்டும் என்பது பாடசாலைகளின் குறிக்கோளாகிவிட்டது. இந்த நிலை மாற்றப்படவேண்டும் எனக் கூறும் கட்டுரையாளர் அதற்குரிய வழிவகைகளையும் விளக்குகின்றார்.*

**அ. பஞ்சலிங்கம் B. Sc. Dip in. Ed.**

இலங்கையில் ஏறத்தாழ 10,000 அரசாங்கப் பாடசாலைகள் உண்டு. அவை ஒவ்வொன்றும் மாணவர் தொகையிலும் வசதிகளைப் பொறுத்தவரையிலும் மிகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன; அரசாங்க பாடசாலைகளாக இருந்த பொழுதிலும் அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பெறுவதில் ஒன்றுடனொன்று போட்டி இடுகின்றன; சமூகத்தில் செல்வாக்குள்ளோரைப் பாடசாலையின் ''பெற்றோர்'' ஆக்குவதிலும் முனைப்பாயிருக்கின்றன. இந்நிலையில் பாடசாலை அனுமதியில், விசேடமாக ஆரம்ப பாடசாலை அனுமதியில், சுற்றறிக்கைகள் மூலம் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பொழுதிலும், அவை பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. இதன் விளைவாகப் பெரிய, வசதிவாய்ந்த பாடசாலைகள் வசதி உள்ள, செல்வாக்கான ''பெற்றோர்'' களைப் பெற்று மேலும் பெரியனவாகவும் வசதி கூடியனவாகவும் திகழ்வது கண்கூடு. இதே வேளை வசதிகுறைந்த பாடசாலைகள் மேலும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்நிலை முழுமையாகப் பாடசாலை முறைமைக்குத் தீங்கு விளைவிக்கின்றது.

வளங்கள், அரச ஆதரவு, பெற்றோர் ஈடுபாடு, அனுமதிக்கப்படும் மாணவர்களின் தரம், கிடைக்கின்ற ஆசிரியர்களின் திறமை என்பவற்றை நோக்கும் பொழுது வசதிகுறைந்த பாடசாலைகள் (பின்தங்கிய பாடசாலைகள்) அலட்சியப்படுத்தப் படுகின்றன என்பதை உணரலாம். இப்பாடசாலைகளின் நிலையை உயர்த்துவதற்கு இதய பூர்வமான முயற்சி எதுவும் மேற் கொள்ளப்படவில்லை.

தீவின் பல பகுதிகளிலும் இடிபாடுகளையுடைய நூற்றுக்கணக்கான பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றுட் பல ஓலையால் வேயப்பட்ட தற்காலிக அமைப்புக்களாகும். அநேகமானவை போதிய தளபாடங்கள் அற்ற நிலையிலும் காணப்படுகின்றன. வசதிகளும், கல்வியில் அதிக சந்தர்ப்பங்களும் வழங்கக் கூடிய பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஆற்றலோ, செல்வாக்கோ, பண வசதியோ அற்றநிலையிலுள்ள மாணவர்களே இந்த வசதிகுன்றிய பாடசாலைகளை நாடுகின்றனர்.



தேசிய மட்டப் பரீட்சைகளிற் பாடசாலைகள் பெறும் அடைவைக் கொண்டே அவை கணிக்கப்படுகின்றன. எனவே அவை பரீட்சைகளைக் குறிக்கோளாகக் கொண்டே செயற்படுகின்றன. பிஞ்சுப் பருவமான 10 வயதிலேயே, பிள்ளைகள் ஆண்டு 5 தேசிய மட்டப் புலமைப் பரிசிற் பரீட்சைக்கு ஆயத்தமாவதிலிருந்து, பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கிய அவர்களின் ஓட்டப் பந்தயம் ஆரம்பமாகின்றது. பிற பாடங்கள் கைவிடப் பட்டுக் கணிதமும் முதல் மொழியுமே மீள மீள அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. நல்ல பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலை புகழைத் தட்டிக் கொள்ளவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சையுடன் ஆரம்பிக்கும் அர்த்தமற்ற இந்த ஓட்டப் பந்தயம், ஆண்டு 13 வரையும், தொடர்கின்றது; பெரிய பாடசாலைகள் 2 — 3% மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதியினை மையமாக வைத்தே செயற்படுகின்றன.

பரீட்சையில் பெறும் சித்திகளும் சான்றிதழ்களுமே உயர் கல்விக் கூடங்களுக்கும் தொழில் உலகிற்கும் நுழைவுச் சீட்டுக்களாக அமைகின்றன. பரீட்சைச் சான்றிதழ் ஒருவரின் வருங்காலத்தினைத் தீர்மானிக்கின்றது எனலாம். சரியோ, தவறோ, எமது சமுதாயம் ஒருவரின் சான்றிதழுக்கு முக்கியத்துவமும் பெறுமதியும் அளிக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. எனவே பரீட்சை முறையிற் பல குறைபாடுகள் இருக்கின்ற போதிலும், நம்பிக்கையான, ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மாற்றுவழி ஏற்படும்வரை, அது நம்முடன் இருக்கத்தான் செய்யும்.

பரீட்சைகளில் முதல் நிலைக்குப் போட்டிகள் அதிகரிக்கும் அதே வேளையில், பரீட்சையை நோக்காகக் கொண்டு கற்பித்தலும் நடைபெறுகையில் தனியார் கல்வி நிலையங்கள் (Tutories) காளான்கள்போல் எங்கும் முளைத்திருப்பதில் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. இத்தனியார் கல்வி நிலையங்கள், கல்வியின் கர்த்தாக்களன்று; பாடசாலைக்குப் பதிலான நிறுவனங்களாக அவற்றை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. பாடசாலை வேலையின் குறைநிரப்பிகளாக (Supplement) ஒரு காலத்தில் அவை கருதப்பட்டன. என்பது உண்மைதான்; வகுப்புக்களிற் பின்தங்கிய மாணவர் பலர் அவற்றாற் பயனடைந்ததும் உண்மைதான். ஆனால், இன்று முறைசார் கல்வி நிறுவனங்க

ளுக்குச் சவாலாகவும், அவற்றின் அடித்தளத்தையே ஆட்டங்காணச் செய்யுமளவிற்குப் பெரிய பயமுறுத்தலாகவும் அவை காணப்படுகின்றன. முறைசார் கல்வி நிறுவனங்களிலுள்ள குறைகளை இனங்கண்டு, அவற்றை நீக்குவதன் மூலம், தனியார் கல்வி நிலையங்களை வலுவிழக்கச் செய்யலாம்.

பாடசாலைச் செயற்றிட்டத்தில் இணைப்பாடவிதான நிகழ்வுகள் முக்கியமானவையாகக் கருதப்பட்டு, பெருந்தொகையான பணமும் செலவிடப்படுகின்றது. ஆனால், கணிசமான மாணவர்கள் இவற்றிற் கலந்து கொள்வதில்லை. இவற்றின் பெறுமதியை அவர்கள் உணராதிருப்பதும், பரீட்சையே முக்கியமானது என அவர்கள் கருதுவதும், அவர்களின் திறமைகளை மதிப்பிடும்பொழுது இணைப்பாடச் செயற் பாடுகளில் உள்ள திறமைகள் கவனிக்கப்படாததும் இதற்கான காரணங்களாகும். இச்செயற்பாடுகள் மூலம், மாணவர்கள் தம் அனுபவங்களை மேலும் வளப்படுத்தலாம்: தமது மன ஈடுபாடு, திறமை முதலியவற்றை இனங்காண்பதற்கும் விருத்தி செய்வதற்கும் அவை சந்தர்ப்பமளிக்கின்றன; குழுவாகச் சிந்திக்கவும் செயற்படவும் வாய்ப்பளிக்கின்றன. மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கு இணைப்பாட விதானச் செயற்பாடுகள் இன்றியமையாதவை என்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்து கொள்வதவசியம்.

பரீட்சைக்குத் தேவையற்ற எதுவும் இப்போது கவனிக்கப்படுவதில்லை. விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குத் தேவையான செய்முறை வேலைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை; அவற்றைச் செய்வதில் மாணவர்களுக்கும் உற்சாகம் இருப்பதில்லை. செய்முறை வேலைகளில் அவர்கள் ஈடுபடும் பொழுது, அவர்களின் அறிவு, உறுதியர்வதுடன், வேறும் பல திறன்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன.

பாடங்களிலே, விசேடமாக விஞ்ஞான பாடங்களிலே போதிய நவீன நூல்கள் தமிழ் மொழியிற் கிடையாமை, மாணவரின் கல்வியின் தரத்தினைப் பெரிதும் பாதிக்கின்றது. அவர்கள் வகுப்பில் எடுக்கும் குறிப்புக்களில் மட்டும் தங்க வேண்டிய கதிக்குள்ளாகின்றனர். போதிய நூல்கள் ஆங்கில மொழியில் காணப்படுகின்றன. ஆனால் அவர்களின் ஆங்கில அறிவு போதுமானதாக இல்லாமையால் ஆங்கில நூல்களை அவர்கள் உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளனர்

பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்கக் கூடிய வசதி இருத்தல் அவசியம். ஆனால் துர்ரதிர்ஷ்ட வசமாக அதிகாரத்திலுள்ளவரின் அக்கறையின்மையாலும் தகுதி வாய்ந்த ஆளணியினர் இல்லாமையினாலும் இச்சேவை மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை.

மாணவர்களுக்குப் பூரணத்துவமான கல்வி வழங்கப்பட வேண்டுமானால் பரீட்சையின் முக்கியத்துவம், அதில் நிலவும் போட்டி ஆகியன குறைவதற்கு வழிகள் காணப்பட்டு, சமூக நோக்கிலும் மாற்றமேற்பட வழி செய்தல் அவசியம். இப்பொழுது மாணவரின் திறமையின் அளவு கோலாக இருப்பது பரீட்சைப் பெறுபேறுகள்தாம் என்ற நிலையையும் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

# மாலைப் பொழுதினிலே...!

அனுபவம் நல்ல ஆசான் என்பர். நமது சொந்த அனுபவங்கள் மட்டுமல்லாமல், மற்றையோரின் அனுபவங்களும் நமக்கு வழி காட்டியாக இருக்கக்கூடியவை. சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் சில நிகழ்ச்சிகளைத் திரட்டித் தருகின்றார் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் முன்னைநாள் அதிபரும் வடமாகாண அதிபர் சங்கத்தின் முன்னைநாள் செயலாளருமான இக்கட்டுரையாளர்.

பூ. க. இராசரத்தினம் B. A. Dip. in Ed.

அருளொளி வீசும் அம்பாள் ஆலயத்தின் தெற்கு வீதி அது; மாமர நீழல்; எப்போதும் இனிமை தருகின்ற இயற்கைச் சூழல், தம் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற பலர் மாலைப் பொழுதிலே இந்த இடத்திலே சந்திப்பது வழக்கம். அவர்களுடைய கதைகளையும், கருத்துப் பரிமாறல்களையும் கலகலப்பையும் கேட்பவர்கள் நிச்சயமாக அவர்கள்மேற் பொறாமை கொள்வார்கள். வயது கூடக்கூட உடல் பலம் குன்றினாலும் உள்ளம் பலமடையும் என்பதற்கு அவர்கள் உதாரணம்.

முதுமையடைந்தவர்களை, ''வாழ்க்கையின் மாலைப் பொழுதிற்கு வந்துவிட்டார்களே!'' என வருத்தத்துடன் சிலர் குறிப்பிடுவதுண்டு. இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. மாலைப் பொழுது, பலருக்கும் இன்பமளிக்கும் பொழுது, குழந்தைகள் குதூகலமாக விளையாடுவதும், காதலர் கருத்தொருமித்துக் கடற்கரையிலும் பூங்காவிலும் உலாவுவதும் மாலைப்பொழுதிற்றானே! பகல் முழுவதும் உழைத்துக் களைப்புற்றவர்கள் மாலைப் பொழுதை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்? மாலைப் பொழுதின் இனிமையும் கவர்ச்சியும் முதுமைக்கும் உண்டு.

இன்றைய சந்திப்பில் ஓய்வு பெற்ற, ஆசிரியர்கள் பலர் கலந்து கொள்கின்றனர். தலை'மை'இல்லாத அதிபர் கந்தப்பு, இந்த நுரைமுடியழகர்களின் இணைப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

''நான் தேங்காய் வாங்குவதற்குச் சந்தைக்குச் செல்வதுண்டு. பலர், செத்தல் தேங்காயைத்தான் தெரிவு செய்வார்கள். அதிலேதான் அதிகபால் இருக்குதாம்'' என முதுமையின் பெருமையை நிலை நாட்டுபவர் அவர்.

''எமக்கு உடலை மட்டுந்தான் இறைவன் படைத்தானா? உள்ளம், ஆன்மா, அறிவு எல்லாவற்றையும் சேர்த்தே அவன் எம்மைப் படைத்துள்ளான்.

உடல், முதிர. முதிரத் தளர்ச்சி அடையும், ஆனால் உள்ளமும் அறிவும் முதிர்ச்சி அடைய அடைய அவை அதிக சக்தி பெற்றுப் பிரகாசிக்கும். சமூக அசைவுகளை நன்கு அவதானிக்கும் அனுபவசாலிகள் ஆழ்ந்து சிந்தித்துக் கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் மிக்கவர்கள், ஆனால், அவர்களுடைய பேச்சை, எல்லோரும் கேட்க விரும்புவதில்லை. அதற்காக நாங்கள் கவலைப்பட்டுக்கொண்டிராமல், எங்களுக்குள்ளேயே பேசி, எங்கள் அறிவையும் அனுபவத்தையும் வளப்படுத்திக் கொள்வோம்''என்ற தலைவரின் ஆரம்ப உரையுடன் ஒவ்வொருவரும் தத்தம் அனுபவங்களையும் கருத்துக்களையும் கூறத் தொடங்குகிறார்கள்.

ஆசிரியர் அருளம்பலம் சொல்கிறார் ''பல வருடங்களுக்கு முன்னர் எனக்கு ஒரு மகன் பிறந்தான். சக ஆசிரியர்களுக்கு வழங்குவதற்காக ஒரு இறாத்தல் கற்கண்டோடு பாடசாலைக்குச் சென்றேன். அன்று, எனது வகுப்பில் இருபது மாணவர்கள்வரை, வீட்டுப் பாடம் செய்யாமல் வந்திருந்தனர்; ஒவ்வொருவருக்கும் நல்ல அடிகொடுத்து, வெளியே அனுப்பினேன். குறுகிய இடைவேளை நேரத்தில், ஆசிரியர் கூடத்துக்குச் சென்றேன். கற்கண்டுச்சரையைக் காணவில்லை! அடியின் உறைப்புக்கு இனிப்பு தேவைப்பட்டிருக்க வேண்டும்! என் அனுபவக் குறைவினால், உளரீதியான நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தண்டனையை வழங்காமல் பழைய தண்டனை முறையைப் பின்பற்றியதை உணர்ந்தேன். கற்கண்டின் இழப்பில் நான்கற்ற பாடம் இது''

முஸ்லிம் பாடசாலையொன்றிற் கற்பித்த முத்தையா ஆசிரியர் தன் அனுபவத்தைக் கூறுகிறார்.

''முஸ்லிம் மாணவர்கள், பொதுவாக, ழ, ள, ல. உபயோகத்திற் குழப்பமுடையவர்கள். ஒரு முஸ்லிம் மாணவன் ''எலுதுவேன்'' என்றே எப்போதும் எழுதுவான். நான் இனிச் சரியாக எழுதுவேன்'' என்பதை நூறு தரம் எழுதும்படி சொன்னேன். நூறு தடவை அப்படி எழுதிய அந்த மாணவன் இறுதியில் சேர், நான் நூறு முறை எலுதிவிட்டேன் எனவும் எழுதியிருந்தான். ''இந்தத்தண்டனை இயந்திரமயமானது, அம்மாணவனிடம் எவ்வித உளத்தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்கிறார் ''தலைவர்.

''எனது மாணவன் ஒருவனின் விவேகத்தை விளக்கட்டுமா?'' எனக்கேட்டுப் விட்டுப் பதிலை எதிர்பாராமலே தன் அனுபவத்தைக் கூறத் தொடங்குகிறார் வரைதல் ஆசிரியர் வைத்திலிங்கம்.

''பெரிய மரமொன்றை வரைந்து, அதிலே ஒருவன் ஏறிக்கொண்டிருப்பதையும் வரையுமாறு என் மாணவர்களுக்குச் சொன்னேன். மரத்தை மட்டும் வரைந்து கொண்டுவந்து என்



னிடம் காட்டினான் அந்த மாணவன். மரம்நன்றாகத்தான் இருந்தது ''ஏறுபவனைக் காணவில்லையே? என்றேன். அவன் மறப் பக்கத்தால் ஏறுகிறான் என்றான். அவன் புத்திசாலித்தனமான பதிலுக்காக அவனைப் பாராட்டினேன்.''

ஆசிரியர் சோமசுந்தரம் மிகச் சுருக்கமாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறார்.

'மாணவன் ஒருவன் பலத்து அழுதபடி ஒருநாள் என்னிடம் ஓடிவந்தான்.

'ஏன் அழுகிறாய்? 'என அனுதாபத்துடன் நான் கேட்டேன்'.

''சேர், குமார், போடா பிசாசிடம் என்று மிரட்டினான் சேர்..... நான் உங்களிடம் ஓடி வந்து விட்டேன்''

''உங்கள் முகத்தில் அசடு வழிந்திருக்குமே?'' என்கிறார் செல்லையா. சோமசுந்தரத்தார் இப்போதும் முகத்தைத் துடைத்துக் கொள்கிறார்.

எல்லாவற்றையும்கேட்டுஇரசித்துக் கொண்டிருந்த நடராசா இப்போது பேச ஆரம்பிக்கிறார். ''நான் ஆசிரியராகக் கடமையேற்ற முதலாம் வருடத்திலேயே சக ஆசிரியர்கள் மத்தியிற் பேச வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. அது சேவை நலம் பாராட்டு விழா. புதியவனாதலால், மிகவும் தயக்கத்துடன் ஆரம்பித்தேன். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குட்கதைத்துக் கொண்டிந்தார்கள். ஒரே ஒரு பெண்மணிமட்டும் புன்முறுவல் பூத்த முகத்துடன் என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள். விழா முடிந்ததும் ''என் பேச்சு எப்படி? என்று அந்த ஆசிரியையிடம் கேட்டேன்.

''அவர் பதில் சொல்லவில்லை. மீண்டும் என்னைப் பார்த்துச் சிரித்தது எனக்கு உற்சாகமாக இருந்தது! அறுபது வயதை எட்டிக் கொண்டிருந்த அந்த ஆசிரியைக்குக் காது கேட்காது என்பதையறிய எனக்கு அதிக நேரம் எடுத்தது.

குமாரசாமி தன் கதையைச் சொல்கிறார்: ''பிள்ளைகள் குழப்படி செய்தால் நான் மோசமாக அடிப்பது வழக்கம். உவர் மாட்டடி அடிப்பார்! என்று மாணவர்கள் தங்களுக்குட் பேசிக் கொள்வது எனக்கும் தெரியும். தை மாதத்தில் ஒருநாள் வழக்கத்துக்கு மாறாகப் பெரிய சந்தனப் பொட்டுடன் வகுப்பிற்குச் சென்றேன். ''சேர், உங்களின்ரை பொட்டைப் பார்த்த பிறகுதான் இன்று மாட்டுப் பொங்கல் என்பது ஞாபகத்துக்கு வருகிறது என்றான். மாணவர்கள் சிரிப்பை அடக்கப் பெரிதும் கஷ்டப்பட்டனர். நானே சிரித்தது அவர்களுக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. அவர்களின் சிரிப்பொலி வெகு நேரம் கேட்டது.

''நைன்ரியல்சேர்ந்து நகைச் சுவைக்கச்சேரி நடத்தினம் என்று எம்மைப் பார்ப்பவர் நினைக்கக் கூடும். சுவையான பல அனுப

வங்களை நாங்கள் இன்று பகிர்ந்து கொண்டுள்ளோம். எல்லா அனுபவங்களும் எம்மைச் சிந்திக்க வைக்கும் அனுபவங்கள் அனுபவமே நல்ல ஆசான் என்று சொல்வது உண்மைதான். வாழ்நாள் முழுவதும் கல்வி தேவை, அறிவுக்கு எல்லையில்லை, ஆய்வுக்கு முடிவு இல்லை. ஆய்வு நின்றால் மனித முன்னேற்றம் நின்றுவிடும். மாணவர்கள் தம் ஆற்றல்களை, நல்ல விழுமியங்களை அறிய நாம் உதவி செய்ய வேண்டும். ஆசிரியர்கள் மட்டுமல்ல, பெற்றோரும் பாட்டனும் பாட்டியும் அவர்களுக்குப் போதிப்பவர்கள்தாம். பரம்பரை இடைவெளியை அறிந்து மாணவர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும்; அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்''

''இயற்கை நியதியின்படி பிள்ளைப்பருவம் நீண்ட காலமாக இருக்கிறது. ஒரு குட்டிப்பூனை, விரைவாக, சுமார் இரண்டு வருடத்திற்குள் பூனையாகிவிடுகிறது; நாய்க்குட்டி விரைவில் நாயாகிவிடுகிறது. ஆனால், ஒரு பிள்ளை, பல வருடங்கள் கழிந்த பின்னர்தான் வயது வந்தவர்'. adult என்ற நிலையை அடைகின்றது. எனவே ஒரு பிள்ளைக்கு. திட்டமிடப்பட்ட சிறந்த வழிகாட்டல் தேவை, வாழ்க்கை என்ற நாடகம் முதலில் பள்ளி என்ற மேடையிலேயே அரங்கேறுகிறது. இந்த நீண்டகாலப் பயிற்சி, வாழ்க்கைச் சுமையைத் தாங்கக்கூடிய வல்லமையை மாணவர்களுக்கு வழங்குகிறது; வழங்க வேண்டும். புதிய அனுபவங்கள் மூலம் புதிய கருத்துக்களை உயர்ந்த விழுமியங்களைக் காண்பதற்கு ஆசிரியர்கள் மாணவர்களைத் தூண்டவேண்டும். ஆசிரியர்களின் வாழ்க்கை எப்போதும் உடன்பாட்டுத் தன்மைகளை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்''

''சிறந்த ஆசிரியர் ஒரு பாடப்புத்தகத்திற்குச் சமமானவர்'' என மகாத்மா காந்தி கூறியுள்ளார். ''நல்ல ஆசிரியர்கள், நல்ல பாடசாலைகளை உருவாக்குகிறார்கள்; நல்ல பாடசாலைகள் நல்ல நாட்டை உருவாக்குகின்றன என்கின்றார் தத்துவஞானி இராதா கிருஷ்ணன். நாம் பெற்ற அறிவை, நாம் இறக்க முன்பு, மற்றவர்களுக்குப் பயன்பட வழங்கவேண்டும். முதுமையின் முத்திரை விழாமல் இருக்க, இளமை மாறாத மனநிலை தேவை. பாடசாலை, பல்கலைக் கழகங்கள் போன்றவைதாம் கல்வியை நமக்குக் கற்பிக்கின்றன என்று சொல்ல முடியாது, பார்வையிற்படும் பொருள்கள், காதில் விழும் செய்திகள், நமக்கு ஏற்படும் அனுபவங்கள் எல்லாமே ஆசான்களாக அமைகின்றன. பல்வேறு வகையிலே நாம் பெறும் அறிவை தேர்ந்து தெளிந்தபின் சுவையான முறையில் மற்றையோர்க்கு வழங்க வேண்டும். சிரித்துப் பேசவும் பழக வேண்டும் ''என்ற தலைவரின் நிறைவுரையுடன், அவப் பொழுதைத் தவப்பொழுதாகச் செலவிட்ட மன நிறைவுடன் அனைவரும் தத்தம் இல்லம் ஏகுகின்றனர்.

# ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

## யாழ். மத்திய கல்லூரி அதிபரின் நினைவில் மிதக்கும் நிகழ்ச்சி இது!

அது ஒரு கிராமப்புறப் பாடசாலை. ஆசிரியர்கள் தங்கும் அறை புதிதாகக் கட்டப் பெற்று அழகாக இருந்தது. ஏதாவது நல்ல சிந்தனையை, ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய பொன்மொழியொன்றை அங்கே எழுதி வைக்க வேண்டுமென ஆசிரிய சங்கம் முடிவு செய்து அந்தப் பொறுப்பைப் பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தது.

அடுத்த நாள், ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'' என்ற ஔவையாரின் பொன் மொழியை அதிபர் அங்கே எழுதி வைத்தார். ஆசிரியர்களிற் சிலருக்கு இது பெரும் சங்கடமான நிலையை ஏற்படுத்தியது; அவ்வறையிலே இருப்புக் கொள்ள முடியாத நிலை சிலருக்கு உண்டாகி விட்டது. ''வில்லங்கத்தை விலைக்கு வாங்கி விட்டது'' போன்ற உணர்வு அவர்களுக்கு இருந்தது. அன்றைய நாள் முழுவதும் எல்லோரும் ஏதோ ஒரு வகுப்பிற் கற்பித்துக் கொண்டே இருந்தார்கள்!

மறுநாட்காலை ஆசிரியர் தங்கும் அறையைப் பார்த்த அதிபரை வேறொரு பொன்மொழி எதிர் கொண்டழைத்தது. ''ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.'' முந்திய பொன்மொழியின் கீழ் அழகாக அது எழுதப்பெற்றிருந்தது. அதிபர் ஒருவரையும் சினந்து கொள்ளவில்லை, எழுதியவரின் மதிநுட்பத்தையும் இலக்கிய நயத்தையும் தனக்குட் பாராட்டிக் கொண்டார்.

'வல்வினைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் எனப் புன்முறுவலுடன் கூறி விட்டுச் சென்று விட்டார்!

காலப்போக்கில், எழுத்துக்கள் மங்கத் தொடங்கியபோதிலும் ஆசிரியர் மத்தியில் அவை ஏற்படுத்திய நல் விளைவுகள் தொடர்ந்து ஒளிவிட்டுக் கொண்டேயிருந்தன. கடமையுணர்ச்சியுடன் அவர்கள் கற்பித்தலை மேற்கொண்டனர்: அதிபர் ஆசிரியர்க்கிடையிலான சுமுகமான உறவும் தொடர்ந்தது.

நா. க. சண்முகநாதபிள்ளை B. Sc. Dip. in Ed

## 'ஒரு' – சில வரிகளில்

★ ஓர் இலக்கணக் குறிப்பு:

ஓர், ஒரு என்பவை 'ஒன்று' என்ற தொகையைக் குறிப்பன. உயிரெழுத்துடன் தொடங்கும் சொல்லின் முன் 'ஓர்' என்பதையும் (ஓர் ஊர்) உயிர் மெய்யெழுத்துடன் தொடங்கும் சொல்லின் முன் 'ஒரு, என்பதையும் (ஒரு கிராமம்) உபயோகிப்பதே சரிய ானது.

— பண்டிதர்

★ ஒரு வேண்டுகோள்

இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிக்கும்போது, அவற்றில் எழுதப்படுவது தமிழ்மொழிதானா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. நல்ல தமிழ் எழுத்தை ஊக்குவிப்பதற்கும் பிழைகளைக் களைவதற்கும் 'விளக்கு' மூலம் ஏதாவது செய்யுங்கள்.

—சு. இராஜநாயகன்

★ ஓர் எச்சரிக்கை

'நான் எவ்வளவோ துன்பப்பட்டுப் படித்தேன். ஆகையால் இந்தக் காலத்துப் பிள்ளைகளும் துன்பப்பட்டுப் படிக்க வேண்டும்' என்று ஒருவர் கருதுவாரானால், அவர் ஆசிரியத் தொழிலுக்கு வராமலிருப்பது நல்லது.

—டாக்டர் மு. வரதராசன்

★ ஒரு கருத்து

படித்துப் பட்டம் பெற்றவர்கள்தாம் அறிஞர்கள் என்பதல்ல. படிக்காத மேதைகளும் பலபேர் உண்டு. 'விளக்கு' அவர்களை வெளிக் கொணர வேண்டும், ஆசிரிய தியாகிகளையும் குறிப்பிட வேண்டும்.

அல்வாய் ம. கணேசவேல்

★ ஓர் எதிர்பார்ப்பு

உள்ளதைக் காட்டி நல்ல
உண்மையை உணர வைக்க
மெள்ளவே 'விளக்கு' வந்தால்
மேதினி ஒளியால் உய்யும்

மட்டுவில் மு பாலசுப்பிரமணியம்



★ ஓர் அனுபவமொழி

எனக்கு ஆறு ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் எனக்கு எல்லா விடயங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களின் பெயர்களாவன:- எங்கே?, என்ன?, எப்பொழுது ஏன்? எப்படி? யார்?

கிப்ளிங்

★ ஒரு பாராட்டு.

"விளக்கு" இரண்டு இதழ்களையும் பார்த்தேன். புதுமையான, கவர்ச்சிகரமான அமைப்பைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. கட்டுரைகளும் தரமாக இருக்கின்றன. 'இப்படி ஒரு சஞ்சிகையை நானும் வெளியிட்டால்...!' என ஆசைப்படுமளவிற்கு "விளக்கு" என்னை ஈர்த்துக்கொண்டது.

நல்லை அமிழ்தன்

★ ஓர் அவசியதேவை

இன்றைய நிலையில் ஆசிரியர்களின் பங்கு, அர்ப்பணிப்பு சிரமங்கள் போன்றவற்றை மாணவ சமுதாயத்துக்கும் ஏனையோருக்கும் எடுத்துக்கூறி ஆசிரியர்களின் மதிப்பை, அந்தஸ்தைச் சமூகத்தில் உயர்த்துதல், அவசியம். தன்னம்பிக்கை, தலைமைத்துவம், ஆளுமை போன்ற சிறப்பான குணாதிசயங்களுடன் நமது பிரதேசக் கல்வி அபிவிருத்திக்காகச் சேவை செய்வதற்கு இப்போதைய இளம் ஆசிரியர்களை "விளக்கு" தூண்ட வேண்டும்.

சங்கானை க. இராசதுரை

★ ஒரு தகவல்

வேலாயுதம் மகா வித்தியாலயம் என இப்போது வழங்கப்படும் புலோலி ஆண்கள் பாடசாலையின் முன்னைய அதிபர்களுள் ஒருவரான திரு. த. இராமநாதபிள்ளை, முன்னர் மாணவனாக இருந்த காலத்திலேயே "யவன மஞ்சரி" என்ற நூலொன்றை எழுதினார். கிரேக்க நாட்டவர் சம்பந்தமான அந்நூல், அக்காலத்தில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிற் பாடப் புத்தகமாக உபயோகிக்கப்பட்டது.

—கலைச்செல்வி

★ ஒரு வெள்ளிவிழா

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை அதிபர் திருவாட்டி மா. சாரதாமணி அவர்களுடைய ஆசிரியப் பணியின் வெள்ளி விழா விற் கல்விஅதிகாரிகள், அதிபர்கள்' ஆசிரியர்கள் பெருமளவிற் கலந்துகொண்டு அவரை வாழ்த்தினர்: ஊர்ப் பெயதுமக்கள் தங்கப் பதக்கஞ் சூட்டிக் கௌரவித்தனர்,

சங்கரத்தை —இ. சபாநாதன்

# தடையில்லா வகுப்பேற்றம்

ஆண்டிறுதிப் பரீட்சையின் அடிப்படையிலே வகுப்பேற்றம் நடைபெறுகின்றது. சில மாணவர்கள், மீண்டும் அதே வகுப்பிற் கற்கும்படி பணிக்கப்படுகின்றனர். இம்மாணவர் சம்பந்தமாக வடமாகாண அதிபர் சங்கம், வட - கிழ் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளது. பலருக்குத் தலையிடியைக் கொடுக்கும் இம் முக்கியமான பிரச்சினை பற்றி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் - எல்லோரும் சிந்திக்க வேண்டும் என்பதற்காக, அந்த அறிக்கையின் முக்கியமான சில பகுதிகளை வெளியிடுகின்றோம்.

**வ. மா. அதிபர் சங்கம்**

மாணவர்களை வருட இறுதிப் பரீட்சையின் அடிப்படையில் வகுப்பேற்றம் செய்வது சம்பந்தமாக எமது கருத்துக்களைக் கூறமுன் தற்போதுள்ள நிலைமையை எடுத்துரைக்க விரும்புகின்றோம்.

1. இப்பொழுதும் சில பாடசாலைகளில் மாணவர்கள் வருட இறுதிப் பரீட்சையின் பின் தடையின்றி வகுப்பு ஏற்றம் செய்யப்படுவதில்லை. வகுப்பேற்றப் படாத மாணவர்கள் தொகை 15 அளவில் உள்ள பொழுது அவர்களைத் தனியான வகுப்புக்களில் வைத்துப் பரிகாரக்கற்பித்தல் நடைபெறுகின்றது. இம் முயற்சி வகுப்பேற்றப் படாத மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் வகுப்பேற்றப்படாமற் தடுக்கப்பட்ட மாணவர்களின் தொகை குறைவாக உள்ள போது அவர்கள், கீழ்வகுப்பிலிருந்து புதிதாக வகுப்பேற்றப்பட்ட மாணவர்களுடன் சேர்ந்து கற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது அவர்களின் கல்வியில் அதிக மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. பதிலாக இம் மாணவர்களின் நடத்தை, ஆசிரியருக்கும் சக மாணவர்களுக்கும் இடைஞ்சலாகவே காணப்படுகின்றது.

மாணவர்களை ஒரு வகுப்பில் மீண்டும் தங்கிக் கற்கும்படி பணிக்கும்பொழுது அதனைப் பாதிக்கப்பட்ட மாணவர்களோ அவர்களின் பெற்றோர்களோ விரும்புவதில்லை: இதில் உள்ள நன்மைகளை அவர்கள் உணர்வதில்லை. இதனால் இது பாடசாலைகளுக்கு ஒரு தலையிடியாகின்றது. இம் மாணவர்களும் உளரீதியாகப் பாதிப்படைகின்றனர். அவர்கள் இதனை ஒரு தண்டனையாகவே கருதுகின்றனர். இம்மாணவர்களின் வகுப்புக்களிற் கற்பிப்பதற்கு ஆசிரியர்களும் தயங்குகின்றனர்.

2. ஆண்டு 6இலும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களிலும் உள்ள மாணவர்கள் சிலர் சரியாகத் தமிழில் எழுதவோவாசிக்கவோஇயலாத நிலையில் உள்ளமை மிகவும் வேதனைக்குரியது. இதற்குக் காரணம் ஆரம்ப நிலைகளில் மொழியினைக் கற்றல், கற்பித்தலில் ஏற்பட்ட குறைபாடுகளாகத்தான் இருத்தல் வேண்டும்.

3. ஆண்டு இறுதிப் பரீட்சை ஒன்றினை மட்டுமே கவனத்திற்கொண்டு சில சமயங்களில் மாணவர்கள் வகுப்பேற்றப்படாதுள்ளனர். ஒரு பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு வகுப்பேற்றத்தினைத் தீர்மானித்தல் ஒரு ஆரோக்கியமான முறையன்று.

4. ஒரு பாடசாலையின் வகுப்பில் பின்தங்கிய மாணவனாகக் கணிக்கப்படுபவன் இன்னொரு பாடசாலையின் வகுப்பில் முன்னிலை மாணவனுடன் ஒப்பிடக்கூடிய தரத்திலிருக்கலாம். எனவே மாணவர்களை வகுப்பேற்றாது தடுப்பதற்கு ஒரு பொதுஅடிப்படை கையாளப்பட வேண்டும்.

மாணவர்களின் வகுப்பேற்றம் தொடர்பாக மேல் காட்டப்பட்ட நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எமது அபிப்பிராயங்களை எடுத்துக்கூற முற்படுகிறோம்.

மாணவன் ஒருவன் தடையின்றி வருட இறுதியில் வகுப்பேற்றப்பட வேண்டுமென்ற கோட்பாட்டினை நாம் ஏற்கவில்லை. ஆனால் ஒருவர் ஒரு வகுப்பில் மீளக்கற்கும்படி பணிக்கப்படும் பொழுது,

(i) அவனுக்குப் பரிகாரக் கற்பித்தலுக்கு வேண்டிய வசதி செய்யப்பட வேண்டும்.

(ii) இப்பணிப்பு விடப்படுவதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்பிருந்தே பெற்றோருடன் தொடர்பு கொண்டு மாணவர் பற்றி

அவரின் கல்வி நிலைபற்றித் தவணைக்கு ஒரு முறையாவது கலந்துரையாடல் வேண்டும். பெற்றோரின் சம்மதத்துடனும் ஒத்துழைப்புடனும் மீளக் கற்கப் பணித்தல் நன்று.

(iii) ஒரு தடவை மட்டுமே இப்பணிப்பும் வழங்கப்படுதல் வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தை அம்மாணவனின் நிரந்தர முன்னேற்றத்திற்கு வாய்ப்பாகப் பயன்படுத்துவது ஆசிரியர் மாணவர், பெற்றோர் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாகும். மேலும் தமிழ் மொழியினைச் சரியாக வாசிக்கவோ எழுதவோ முடியாத மாணவரை முக்கியமாக ஆரம்ப பாடசாலை மாணவரை, மீள வகுப்பிற் கற்கும்படி பணிக்கலாம். அவர்கள் மீதே மூக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். ❀

---

அட்டையில் ஒரு படம்.
அதற்கு ஒரு விளக்கம்.
யாழ். இந்து ஆசிரியர்
**ம. கஜேந்திரன்** தருகின்றார்.

தலை கீழாய் மாறிவரும் தரணியை மீண்டும் நிமிர்த்தி
நிலை மாறா திருத்திவிட நினைப்பவர்தா மாசிரியர்
நெம்பினுட் செம் ''மை'' புகுத்தி நிரந்தர நூல்களிலேற்றி
நேர்மையுடன் தெண்டுகிறார் நேராகா தாவுலகம்?

---

# பல்கலைக் கழக அனுமதிமுறை— சில குறிப்புக்கள்

**க. பொ. த (உ. த) 1993 பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. சித்தியடைந்த எத்தனை பேருக்குப் பல்கலைக் கழக அனுமதி இடைக்கும்? என்ன அடிப்படையில் அனுமதி மேற்கொள்ளப்படுகின்றது பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசா ஆகியோர் அளித்த தகவல்களின் அடிப்படையில், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரிய வாண்மைக் குழுவினர் தயாரித்த இக்கட்டுரை இவற்றைத் தெளிவாக்குகின்றது.**

க. பொ. த (உயர்தர) ஆகஸ்ட் 1993 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இம்முறை பரீட்சார்த்திகளின் தராதர அடைவுகளுடன் (Gradings) அவர்களின் மாவட்ட நிலை (District Rank) தேசிய நிலை (Naticnal Rank) என்பனவும் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோரின் அனுமதி 1995 ம் ஆண்டு பிற்பகுதியில் நடைபெறலாம். இக்கால இடைவெளியில் மேலும் இரண்டு க. பொ. த (உ/த) பரீட்சைகள் நடைபெறலாம். எனவே மாணவர்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய கற்கை நெறிகள்/பீடங்கள் பற்றி ஓரளவு அனுமானிக்கக் கூடியதாக இருப்பின் ஏமாற்றங்களை முன்கூட்டியே தவிர்த்து, வேண்டுமாயின் மீளவும் பரீட்சைக்குத் தோன்றி, விரும்பிய கற்கை நெறியினைத் தொடர முற்படலாம். இந்நிலையில் சில பலனுள்ள கருத்துக்களைத் தர முற்படுகின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக, பல்கலைக்கழக அனுமதிக்குப் பின்பற்றப்படும் முறையினைப் பார்ப்போம். கலை தவிர்ந்த ஒவ்வொரு கற்கை நெறிக்கும் 40% மாணவர்கள் தேசிய ரீதியில் திறமை அடிப்படையிற் (Merit quota) தெரிவு செய்யப்படுகின்றனர்: 55% மாணவர்கள் ஒவ்வொரு மாவட்ட சனத்தொகைக்கும் அமைவாக அந்தந்த மாவட்டங்களிலிருந்தும் (district quota) 5% மாணவர்கள் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்தும் (backdward district quota) தெரிவு செய்யப்படுகின்றனர்.

உதாரணத்திற்கு மருத்துவத் துறைக்கு அகில இலங்கையிலும்

800 மாணவர்களைத் தெரிவு செய்ய வேண்டியிருப்பின், இம் முறைப்படி

1. 320 மாணவர்கள் தேசிய ரீதியில் திறமை அடிப்ப டையிலும்,
2. 440 மாணவர்கள் மாவட்ட சனத்தொகை அடிப்படை யிலும், (இந்தத் தொகை யில் 5% அதாவது 22 இடங்கள் மட்டுமே யாழ்ப் பாண மாவட்டத்திற்கு உரியதாக அமையும்)
3. 40 மாணவர்கள் பின் தங் கிய மாவட்டங்களிலிருந் தும் தெரிவு செய்யப்படு வர்.

ஒவ்வொரு கற்கைநெறிக்கும் சென்றவருடங்களில் அனுமதிக் கப்பட்ட மாணவர்கள் பற்றிய சில தகவல்களை அட்டவணை குறிக்கின்றது.

| கற்கை நெறி | மொத்த அனுமதி | திறமை அடிப்படையில் அனுமதி | யாழ் மாவட்டச் சனத் தொகைக் குரிய அனுமதி |
|---|---|---|---|
| மருத்துவம் | 800 | 320 | 22 |
| பற்சிகிச்சை | 100 | 40 | 3 |
| பொறியியல் I | 500 | 200 | 14 |
| பொறியியல் II | 70 | 28 | 2 |
| முகாமைத்துவம் | 600 | 240 | 17 |
| வர்த்தகம் | 900 | 360 | 26 |
| உயிரியல் விஞ்ஞானம் | 700 | 280 | 20 |
| பௌதிக விஞ்ஞானம் | 1200 | 480 | 34 |
| கலை ★ | 2500 | 2500 | |



★ கலைப்பீடத்திற்குப் பொது வாக 100% திறமை அடிப்ப டையிலேயே அனுமதி மேற் கொள்ளப்படுகின்றது.

1. மேற்படி அட்டவணையின் உதவியுடன் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் திறமை அடிப்படையில் தெரிவாகக் கூடியவர் எவரென்பதனை அவரின் தேசிய ரீதியிலான நிலையிலிருந்தும் அறிய லாம்.

2. அடுத்ததாக யாழ். மாவட் டத்திற்குரிய மாவட்டச் சனத்தொகை விகித ஒதுக் கீட்டை எடுத்துக்கொள் வோம். யாழ். மாவட்டச் சனத்தொகை ஏறத்தாழ 5%. ஆகையால் இம் மாவட் டச் சனத்தொகை ஒதுக்கீடு மொத்த அனுமதியின் $55 \times \frac{5}{100} = 2.8\%$ ஆகும்.

குறிப்பு:- யாழ். மாவட்டத்தில் க.பொ.த(சா/த)வரை கற்ற பலர் வேறுமாவட்டங்களில் குறிப்பாகக் கொழும்பு மாவட்டத்திற் க. பொ. த (உ/த) பரீட்சைக்குத் தோன் றியுள்ளனர். இவர்கள் இந்த 2.8% ஒதுக்கீட்டிற்கு உரித் துடையவராகக் கணிக்கப் படுவர். ஆனால் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றுப்பட்டியலில் யாழ். மாவட்டத்திலிருந்து பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களை மாத்திரம் கருத்திற்கொண்டு பரீட் சார்த்திகளின் மாவட்ட நிலைகணிக்கப்பட்டுள்ளது. எனவே இப்போது அறிவிக் கப்பட்டுள்ள மாணவர் களின் மாவட்டநிலை சிறிது பின்னடையவே செய்யும் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

**அனுமதிமுறை மறு பரிசீலனை**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது தற்போது நடைமுறையிலிருக்கும் பல்கலைக் கழக அனுமதிக்குரிய திட்டத்தை மறுபரிசீலனை செய் யவுள்ளது. அதற்காக ஒரு குழு வினையும் அமைத்துள்ளது. மறு பரிசீலனையின் போது தேசிய ரீதியில் திறமை அடிப்படையி லான ஒதுக்கீட்டு விகிதாசாரம் கூட்டப்படலாமெனவும் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்குரிய அடிப்படைத் தகுதியும் (180 புள் ளிகள்) அதிகரிக்கப்படலாமென வும் நம்பப்படுகின்றது.

மறுபரிசீலனை செய்யப் பட்ட அனுமதிமுறையே இம் மாதம் அடைவுகள் பெறப்பட்ட மாணவர்கட்கு நடைமுறைப் படுத்தப்படலாம்.

# விவசாயக் கற்கை நெறி — வழிகாட்டி

**விவசாயத் துறையிற் பட்டம் பெறுவோர்க்கும் ஆராய்ச்சியாளருக்கும் நமது நாட்டில் வேலை வாய்ப்புக்கள் அதிகம். இத்துறையில் நாட்டமுடையோருக்குரிய உயர்கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்கள் பற்றி விபரமாக எழுதுகின்றார், கிளிநொச்சி விவசாயபீடத்தின் பயிரியல் துறைத் தலைவர்.**

**க. இராசதுரை** B. Sc. (Agric) ; M. Sc. (Agronomy)

இலங்கை தனது பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிலையில் ஒரு விவசாய நாடாகவே இனங்காணப்பட்டுள்ளது. ஒரு புறத்தில் நன்கு சீரமைக்கப்பட்டு அபிவிருத்தியடைந்த ஏற்றுமதித்துறையை மையமாகக் கொண்ட பெருந்தோட்டத் துறையையும் மறுபுறத்தில் உள்நாட்டு நுகர்ச்சிப் பொருள்களுக்கான விவசாய உற்பத்தியை மையமாகக் கொண்ட குடியானவனின் விவசாயத்துறையையும் உள்ளடக்கிய ஒரு இரட்டைப் பொருளாதார அமைப்பை (Dual Model Economy) இங்கே காண முடிகிறது.

ஆகவே நமது நாட்டின் விவசாயம் அபிவிருத்தியடைய வேண்டுமெனில், அதன் பல்வேறு துறைகளின் துறைசார் நிபுணத்துவங்கள் விருத்தியாக்கப்பட வேண்டியதும், அவற்றின் மூலம் அத்துறைகளின் உயர் தொழில் நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைந்து உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டியதும் இன்றியமையாதது. அபிவிருத்தி அடைந்த பல நாடுகளின் தொழில் நுட்பங்களை அதே அளவிற்கு விவசாயத்துறையில் நாம் இங்கு பயன்படுத்த முடியாது; எமது நாட்டின் நிலைமைக்கு ஏற்பவே நாம் பயன்படுத்த வேண்டும்.

எனவே சிறப்பான, பொருத்தமான, உச்சப்பயன்பாடுள்ள தொழில் நுட்பங்களைக் கண்டறிவதற்குரிய ஆராய்ச்சிகளும் விவசாய அபிவிருத்திக்கு இன்றியமையாதவை. 1970 களின் பிற்பகுதியில் புல நாடுகளில் ஏற்பட்ட பசுமைப் புரட்சிக்கு இத்தகைய ஆராய்ச்சிகள் மூலகாரணமாக இருந்தன. விவசாயத்தின் பல்வேறு துறைகளிலும் இவ்வகையான சிறப்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குச் சில நிறுவன அமைப்புக்களும் சிறப்புப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களும் அவசியமாகிறது.



சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் விவசாயத்துறை வளர்ச்சியை நோக்கும் போது, ஆரம்ப கால வளர்ச்சி மந்த நிலையிலேயே இருந்ததைக் காணலாம். இதற்குரிய முக்கிய காரணம் விவசாயத்துறையின் உயர் கல்வி அமைப்புக்கள் தொழிற்படாமல் இருந்தமையும் இத்தகைய கல்விக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்காமையும் ஆகும். இந்நாட்டின் விவசாய அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை முன்னேற்றுவதற்குரிய முதற்தர நிறுவனமான விவசாயத் திணைக்களம் Department of Agriculture) 1920 ஆண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டபோது அங்கு கடமையாற்றுவதற்குரிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விவசாயபீடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இந்தியாவிற்கல்வி கற்ற பட்டதாரிகள் சிலரே ஆரம்பகாலத்தில் இத் திணைக்களத்திற் கடமையாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இலங்கையின் முதலாவது விவசாயக் கல்வி நிறுவனமான பேராதனை விவசாயக் கல்லூரி (Peradeniya School of Agriculture) யில் இரு வருட விவசாய டிப்புளோமா கல்வி பயின்று சித்தியடைந்தவர்களும் விவசாயத்திணைக்களத்திற் கடமையாற்றினர். விவசாயத் திணைக்களத்தைச் சீராக்கி நெறிப்படுத்தி, அதை நல்ல திறமை மிகுந்த திணைக்களமாக்கிய பெருமை இந்த உத்தியோகத்தர்களையே சார்ந்ததாகும். இவர்களிற் பலர் பின்னர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிற் பயின்று இத்திணைக்களத்தின் அபிவிருத்திக்குச் சிறப்பான பங்களிப்பைச் செய்தனர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விவசாயபீடம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு இங்கு பட்டம் பெற்ற பல மாணவர்களுக்கு விவசாயத் திணைக்களத்திற் கடமையாற்றுவதற்குரிய வாய்ப்புக்கிடைத்ததோடு இவர்களும் பிற்காலத்தில் விவசாய அபிவிருத்திக்குக் கணிசமான பங்களிப்பைச் செய்தனர்.

1960 களில் இலங்கை அரசு விவசாய அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது. இதனால், நாட்டின் விவசாயப் பட்டதாரிகளின் தேவை அதிகரித்தது. 1970 களில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வருடந்தோறும் வெளியேறிய விவசாயப் பட்டதாரிகளின் தொகை 30 — 40 ஆக இருந்தது. இத் தொகை நாட்டின் பல்வேறு துறைகளினதும் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதியதாக இருக்கவில்லை. ஆகவே விவசாயக் கல்வி நிறுவனங்களின் தொகை அதிகரிக்கப்பட்டது.

இன்று இலங்கையில் உள்ள விவசாயக்கல்வி நிறுவனங்களை நாம் மூன்று வகைப்படுத்தலாம்.

1) டிப்புளோமா கல்லூரிகள் (Diploma Colleges)

இக் கல்லூரிகளில் இரு வருட டிப்புளோமாப் பயிற்சி வழங்கப்படுகிறது. க. பொ. த சாதாரண, உயர்தரப்பரீட்சைகளிற் சித்தியெய்திய மாணவர்கள் இங்கு கற்கை நெறிகளை மேற்கொள்ளலாம். இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்வோர் விவசாயத் திணைக்களத்திலும், ஏனைய அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றிலும் தனியார் துறைகளிலும் விவசாயத்தில் நடுத்தரத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களாகப் பதவி வகிக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் சிலவற்றில் இவர்கள் மாதம் ரூபா. 10,000/=ற்கு மேல் வேதனம் பெறுபவர்களாகவும் இருக்கிறார்கள். நாட்டின் பல துறைகளிலும் இத்தகைய பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு உண்டு. இத்தகைய டிப்புளோமாக் கல்லூரிகள் பல அமைப்புக்களின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றன.

அ) விவசாயத் திணைக்களம்:-

இத் திணைக்களம், குண்டசாலை, பெல்விகாரை, அங்குணகொல பவச, வவுனியா ஆகிய நான்கு இடங்களில் டிப்புளோமாக் கல்லூரிகளை நடத்திவருகின்றது. குண்டசாலையிலும், வவுனியாவிலும் தமிழ்மொழி மூலம் இக்கல்வி வழங்கப்படுகிறது.

ஆ) உயர்கல்வித் திணைக்களம்

சில பல்கலைக் கழகக்கல்லூரிகளிலும் இந்த டிப்புளோமாப் பயிற்சி வழங்கப்படுகிறது. அம்பாறையில் உள்ள ஹாடி நிறுவனத்திலும் ஒரு கல்லூரி இயங்கி வருகிறது.

இ) தனியார் நிறுவனங்கள்

கண்டியில் றினிற்றி கல்லூரியிலும். கொழும்பில் அக்குவைனஸ் நிறுவனத்திலும் இப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றில் விவசாயத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளே முதன்மையானவையாகக் கணிக்கப்படுகின்றன. தொழில் வாய்ப்புக்களில் இக்கல்லூரிகளிற் பயின்றோருக்கே முதலிடம் வழங்கப்படுகிறது.

2) விவசாயபீடங்கள்:

இன்று பேராதனை, றுகுண, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய நான்கு பல்கலைக் கழகங்களில் விவசாய பீடங்கள் இயங்கி வருகின்றன. யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைந்துள்ளது. க. பொ. த (உயர்தர) பரீட்சையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், அல்லது விவசாயம் ஆகிய பாடங்களிற்சித்தியடைந்த மாணவர்கள் இவற்றுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இப்பீடங்களில் நான்கு வருடக் கற்கை நெறியைமுடித்த மாணவர்கள் விவசாயப் பட்டதாரிகளாக வெளியேறிப் பல்வேறு துறைகளிலும் தொழில் பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இம் மாணவர்களுக்குரிய வேலை வாய்ப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.



- ★ இலங்கை விவசாயசேவை (Sri Lanka Agricultural Service)
- ★ இலங்கை விஞ்ஞான சேவை (SriLanka Scientific Service)
- ★ இலங்கை கால்நடை அபிவிருத்தி சுகாதார சேவை (SriLanka Animal Production and Health Service)

இச்சேவைகளின் ஊழியம் இலங்கை நிர்வாக சேவையை (Sri Lanka Administrative Service) ஒத்ததாகும்.

கிட்டத்தட்ட 40-50% பட்டதாரிகள் இச் சேவைகளிலேயே நியமனம் பெறுகிறார்கள்.

இவற்றைவிட

- ★ பல்கலைக் கழகம் (விரிவுரையாளர்கள்)
- ★ தேயிலை ஆராய்ச்சி நிலையம்
- ★ இறப்பர் ஆராய்ச்சி நிலையம்
- ★ தென்னை ஆராய்ச்சி நிலையம்
- ★ தென்னை அபிவிருத்திச் சபை
- ★ சீனிக் கூட்டுத்தாபனம்
- ★ கஜு கூட்டுத்தாபனம்
- ★ பனை அபிவிருத்திச்சபை
- ★ நெற்சந்தைப் படுத்தும் சபை
- ★ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
- ★ கல்வி இலாகா (ஆசிரியர்கள்)

போன்ற பல்வேறு நிறுவனங்களிலும் திணைக்களங்களிலும் வருடந்தோறும் பலர் வேலை பெறும் வாய்ப்புக்கள் உண்டு.

இவற்றைவிட கம்பனிகளிலும், தனியார் துறைகளிலும் பல விவசாயப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

விவசாயப்பட்டதாரியின் கற்கைநெறிகளை அடிப்படையாக வைத்துப்பார்க்கும் போது பயிர் உற்பத்தி, விலங்கு வளர்ப்பு நீர் முகாமைத்துவம், விவசாயப் பொருளியல், மண், இரசாயனம், உணவுவிஞ்ஞானம், பயிர்ப் பிறப்பாக்கம், பூச்சியியல் Entomology) நோயியல் Pathology) போன்ற பல்வேறு துறைகளில் இவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலை பெறக் கூடிய வாய்ப்புக்கள் நிறைய உண்டு. வருடந்தோறும் நான்கு பீடங்களிலுமிருந்து சராசரியாக 300க்கும் குறைவான பட்டதாரி

களே வெளியேறுவதால் விவசாயப்பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் தளம்பல் ஏற்படுவதற்கு இடமில்லை.

**3 பட்ட மேற்படிப்பு நிறுவனம்:**

இலங்கையில் விவசாயத் துறையில் பட்ட மேற்படிப்பை (Post graduate studies) தொடர்வதற்கான நிறுவனம் (Postgraduate Institute) பேராதனையில் 1977 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் விவசாயத்துறையின் பல பிரிவுகளில் M. Sc.(Course work ஒரு வருடம்) M. Phil (Research இரு வருடம்) Ph. D (மூன்று வருடத்திற்கு மேல்) போன்ற தரத்திற்கான பகுதிநேர முழுநேர மாணவராகக் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்குவாய்ப்பு உண்டு. விவசாயப் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களில் உடனடியாக வேலை கிடைக்காத மாணவர்கள் மேற்படி நிறுவனத்தில் பட்ட மேற்படிப்பை மேற்கொள்வதன் மூலம் சிறப்பான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ளமுடியும்.

விவசாயத்தில் இரண்டாம் தரத்தில் உயர்பிரிவில்) Second Class Upper Division) சித்தியடைந்த மாணவர்கள் அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள பல் கலைக்கழகங்களில் உயர் கல்வியைத்தொடர்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு. இவர்கள் தங்கள் ஆங்கிலமொழித்திறன் மற்றும் ஆற்றலைப் பரீட்சிக்கும் TOE FL, GPE போன்ற பரீட்சைகளில் நல்ல மதிப்பெண்களைப் பெறும்போது மிக இலகுவாக அனுமதி பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

இக்கற்கை நெறியைப்பயில்பவர் அனைவரும் இதைத்தமது வாழ்வை வளம்படுத்தித்தேவையான ஊதியத்தைப் பெறும் வாய்ப்பாக மட்டும் கருதாது, எத்துறையிற் பங்காற்றினும் அத்துறை மூலம் எமது பிராந்தியத்தின் விவசாய அபிவிருத்திக்கு முழு மனத்துடன் தம்மை அர்ப்பணித்துப் பாடுபடும் மனப்பாங்கை ஆரம்பத்தில் இருந்தே வளர்க்க வேண்டியது இன்றைய சூழலில் மிகவும் இன்றியமையாததாகும்.

**பள்ளிக்கூடமும் சிறைச்சாலையும்**

ஒரு பள்ளிக்கூடத்தைத் திறப்பவன் ஒரு சிறைச்சாலையை மூடியவனுக்குச் சமமானவனாகக் கருதப்படுவான்.

— விக்டர் ஹ்யூகோ.

# அர்ப்பணிப்பு

**பாடக் குறிப்பை எழுதி, அலகுகளை முடித்துப் பாடப்பதிவு செய்வதுடன் ஆசிரியரின் பணி முடிவடைவதில்லை. தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆசிரியர்களாலேயே நல்ல மாணவர்களை உருவாக்கி எதிர்கால உலகத்தை உயரச் செய்ய முடியும் என்கிறார் சுழிபுரத்தில் ஆசிரியப் பணிபுரியும் கட்டுரையாளர்**

**பா. தனபாலன்**

நாட்டின் வளங்களுக்கேற்ப மாணவர்களை ஆளுமையுடையவர்களாக ஆக்குவது கல்வியின் நோக்கங்களுள் ஒன்று. சமுதாயத் தேவைகளைப் பூர்த்தியாக்காத கல்வி நாட்டிற்குப் பொருத்தமற்றது. கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஆசிரியரின் பணிபெரும் பங்கை வகிக்கின்றது.

வரையறுக்கப்பட்டுள்ள வளங்களைக்கொண்டு எத்தகைய கல்வி, எந்த முறையில் வழங்கப்படவேண்டும் என்பதை அதிகாரிகளும் திட்டமிடுவோரும் தீர்மானித்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் பாரிய பொறுப்பு ஆசிரியரிடமே உண்டு. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பிலேயே அவற்றின் வெற்றி முழுமையாகத் தங்கியுள்ளது. பாடத்திட்டப்படி, குறிப்புக்கள் எழுதி அலகுகளை முடித்துப் பதிவுகளைச் செய்வதுடன் ஆசிரியரின் "வேலை" முடிவடையலாம். தம் ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டி, கல்வியின் இலக்குகளை நோக்கித் தம் மாணவர்களைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் ஆசிரியரின் சேவையே, எதிர்பார்க்கும் நற்பயன்களை இலகுவில் விளைவிக்கும் ஆற்றலுடையது.

கற்பித்தலினூடாக மாணவர்களின் உள்ளத்தை ஊக்கப்படுத்தி அது முழு வளர்ச்சி பெற ஆசிரியர் உதவ வேண்டும். ஆசிரியரின் உள்ளம் பக்குவமடைந்து கல்வியை முழுமையாகக் கற்பிக்கும் சேவை மனப்பான்மை இதற்கு அவசியம். இத்தகைய ஆசிரியர்கள், மாணவர்களின் அறிவை வளர்ப்பதுடன், அவர்களின் மன எழுச்சிகளைப் பண்படுத்துவதிலும், மனித நேயமுடைய, சமுதாயப் பற்றுடைய நன்முயற்சிகளில் அவர்களை ஈடு

படுத்துவதிலும் வெற்றியடைவர்.

உடல், உள இயக்கத்தை ஊக்குவித்து, மேலும் சுறுசுறுப்படையச் செய்தல் ''தூண்டல்'' (Stimulus) எனப்படும்; தூண்டலின் நேர்டி விளைவாக நடைபெறுவது ''துலங்கல்'' (Response) எனப்படும். மாணவர்களின் எண்ணங்களை, திறமைகளை ஆசிரியர் தூண்ட வேண்டும். ஆசிரியரின் தூண்டல்களினால், மாணவர் துலங்கும்போது அவர்களுடைய நடத்தைக் கோலங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. புற உலக நிகழ்ச்சிகளுடனோ, தனது மனதிலிருந்து எழும் நிலைகளுடனோ பொருத்தப்பாட்டினைப் பெற உதவும் பல இணைந்த செயற்பாடுகளில் ஈடுபடுவர். சமூக வாழ்க்கையில் எழக்கூடிய அல்லது பொதுவாக எழக்கூடிய பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைக் காணவும் தம்முடன் வாழ்வோரது இயல்புகளை அறியவும், தமது இயல்புகளைத் தாமே அறியவும் முனைவர்.

மட்டுப்படுத்தப் பட்டவையாக இருந்தாலும், அதனாற் சோர்வடையாது பாடசாலையிற் கிடைக்கும் ஒவ்வொரு வளத்திலிருந்தும் அதி உச்சப் பயன்பாட்டைப் பெற முயலும் ஆசிரியர்களே நல்லாசிரியராவர். கற்பித்தற் கருவிகள், விளையாட்டரங்குகள் போன்றவற்றை முழுமையாகப் பயன்படுத்தி அவர்கள் மாணவர்களை முன்னேற்றுவர்.

பாடசாலையில் அளிக்கப்படும் கல்வியின் தரமும் அக்கல்வியினால் மாணவர்கள் அடையும் பயனும் அப்பாடசாலையிற் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பொறுத்தே அமைகின்றன. அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களாலேயே, சிந்தையிற் தெளிவு, உள்ளத்துறுதி, கடமையுணர்வு, சமுதாய நேயம்மிக்க மானுடர்களாகத் தம் மாணவர்களை உருவாக்க முடியும்.

## உயர்வின் காரணம்

*மண்டபங்கள் இடிந்தாலும் வாங்கு மேசைகள் உடைந்தாலும் ஆசிரியர்களின் உள்ளங்கள் உடையவில்லை; உறுதி தளரவில்லை. அவர்களின் துணிச்சலும் விடாமுயற்சியும் மாணவர்களின் கல்வியிலுள்ள அக்கறையுமே, கல்வித் தரம் உயர்வதற்குக் காரணமாக இருந்து வருகின்றன.*

*வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சுந்தரசாமி*
*மெமோரியல் கல்லூரி ஆங்கில தின விழாவில்.*

# பாடக் குறிப்பு.

**அனுபவமற்ற, அனுபவம் குறைந்த ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் அறிவும் அனுபவமும் நிறைந்த, நீண்டகாலமாகக் கற்பித்து வருகின்ற ஆசிரியர்களும் பாடக்குறிப்பை எழுத வேண்டும். திட்டமிட்ட, நன்முறையிற் தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்பு கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் வெற்றிக்கு இன்றியமையாதது என்பதை விளக்குகின்றார் கோப்பாய்ப் பிரதேசத் தொலைக் கல்வி நிலையப் போதனாசிரியர்**

**மா. ஞானலிங்கம் B. A. Dip. in Ed.**

''தினசரி - பாடவேளையில்- வகுப்பறையிற் கற்றல்- கற்பித்தல் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கப்பட்ட முறையிற் செயற்படுத்துவதற்கு வரையறை செய்யப்பட்ட செயற்பாடுகளை ஆசிரியர்கள் பின்பற்றுவதில்லை. ஆசிரியப் பயிற்சி பெறும் காலத்திலும் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறிக் காலத்திலும் மட்டும் சிலவற்றைப் பின்பற்றிவிட்டு, சாதாரண கடமைக் காலத்தில் பின்பற்றாமல் விடுவதும், கல்வியதிகாரிகள்- அதிபர்களின் வற்புறுத்தலுக்காக, பொருத்தமில்லாத வடிவமைப்பில் ஏனோதானோ என்ற நிலையில் பாடக்குறிப்பு எழுதுவதும் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் வழிகாட்டல் சேவைக்குப் பாடசாலைகளுக்குச் சென்ற வேளையில் அதிபர்கள்- பகுதித்தலைவர்கள் சோர்வடைந்த நிலையிற் கூறிய கருத்துக்களையும் நேரிற் கண்டவற்றையும் கருத்திற் கொண்டு சில கருத்துக்களை முன்வைக்கிறேன்.

''அனுபவம் மிக்க ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடத்தைப் பல ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கற்பித்து வருவதால் அவர்கள் பாடத்தைக் கற்பிப்பதற்குப் பிரத்தியேகமான ஆயத்தம் எதுவும் செய்யத் தேவையில்லை'' என்பது ஆசிரியர்கள் ஒரு பகுதியினரின் கருத்து

இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல,

ஆசிரியர் ஒவ்வொரு வருடமும் கற்பித்து வருகிறபோதிலும், அவர்கள் அதே மாணவர்களுக்குத் தொடர்ந்து கற்பிப்பதில்லை. வருடந்தோறும் புதிய மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். புதிய மாணவர்களின் இயல்புகள் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், அவர்கள் கல்வி

கற்கும் சூழல்கள் வேறுபட்டன வாக இருக்கின்றன. எனவே மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பாட ஆயத்தம் மிக அவசிய மானது; பாடத்தைத் திட்டமிடல் முக்கியமானது.

பாடத்தைப் பற்றிச் சிந்திக்காமல்; கற்பித்தல் ஒழுங்கு முறையை முன் கூட்டியே தீர்மானிக்காமல் வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியர்கள் கற்பித்தலின் போது பாடவேளையில் அரைப்பங்கு நேரத்திற்குட் பாடத்தை முடித்துவிட்டு மிகுதி நேரத்திற்கு என்ன செய்வது எனத் தெரியாமல் திண்டாடுவதும்; பாட வேளைக்கு மேலதிகமாக நேரத்தை எடுத்து அடுத்த பாட நேரத்தைத் திருடிய குற்றச் சாட்டுக்கு உள்ளாவதும்; பாட விடயம் தொடர்பான தகவல்களைச் சரியாகக் கூற முடியாமல் மாணவர் முன்னிலையில் திணறுவதும் முன் கூட்டியே யோசித்துத் திட்டமிடாமல் வகுப்பறைக்குச் செல்வதால் வந்த வினைகளே.

ஆசிரியரின் வெற்றி தனக்குரிய பாட வேளையைப் பொருத்தமான முறையிற் சிறப்புறப் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. தனக்குரிய பாடவேளையில் மணித்துளியேனும் வீணாகாமற் பயன்படுத்துவது இன்றியமையாதது. திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட பாடக்குறிப்பு, இதற்கும் உதவும்.

ஒழுங்கு முறையிற் செயற்பட்டு வரும் பாடசாலைக் கட்டமைப்பில், பாடத்திற்குரிய ஆண்டுச் செயற்திட்டம் (பாட விரிவாக்கம்) ஆண்டுத் தொடக்கத்திலேயே - தவணை - மாதம் - வாரம் -நாள் -பாடவேளை என்ற அடிப்படையில் பூரணப்படுத்தப்பட்டிருப்பதால் குறிப்பிட்ட தினத்திற்குரிய (பாடவேளைக்கு) பாடத்திட்டமிடலானது பாடக்குறிப்பாகப் பரிணமிக்கிறது.

தனது மாணவர்களின் அறிவு நிலைக்கேற்ப பாடப் பொருள் அளவினை ஆசிரியர் நிர்ணயிப்பதிற் பாடக் குறிப்பு பெரும் பங்கு வகிக்கின்றது. மாணவர் நிலையை கருத்திற் கொள்ளாது, கற்பித்தற் செயற்பாட்டினை மேற்கொள்வது உரிய பலனைத் தரமாட்டாது. வகுப்பறையில் ஏற்படும் வீண் சிரமங்களைத் தவிர்ப்பதற்கும் பாடத்தை உரிய முறையிற் கற்பித்து கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் வெற்றி பெறுவதற்கும், வகுப்பறைக்குள் நுழைவதற்கு முன்பு பாடத்தைப் பற்றிச் சிந்திப்பது அவசியமாகின்றது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் பல்வேறு விதமான கோலங்களைப் பின்பற்றிப் பாடக் குறிப்பைத் தயாரிக்கின்றனர். எம்முறை பின்பற்றப்பட்ட போதிலும் பாடம், திகதி, வகுப்பு, நேரம், அலகு, உப அலகு, குறிக்கோள், கற்பித்தல் முறை, கற்பித்தல்



துணைச் சாதனங்கள், பாடத்தினுள் நுழைதல் (அறிமுகம்) பாட வளர்ச்சிப் படிமுறைகள் மீள வலியுறுத்தல், மதிப்பீடு, குறிப்பு போன்ற முக்கிய அம்சங்கள் இடம் பெற வேண்டும்.

## கனிஷ்ட இடைநிலை - சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களுக்கான பாடக்குறிப்புப் படிவம்

பாடம்:- வகுப்பு:-

திகதி:- நேரம்:-

அலகு:-

உப அலகு:-

குறிக் கோள்:-

அறிவு-

திறன்-

மனப்பாங்கு-

கற்பித்தல் முறை;-

கற்பித்தல் துணைச் சாதனங்கள்:-

கற்பித்தற் செயற்பாடு:-

அ) அறிமுகம் (பாடத்தினுள் நுழைதல்):-

ஆ) பாட வளர்ச்சி

படி (i)

படி (ii)

படி (iii)

படி (iv)

படி (v)

மீளவலியுறுத்தல்

மதிப்பீடு;-

1.

2.

குறிப்பு:-

உதாரணமாக 40 நிமிடப் பாடவேளையில் ஆரம்பம் 3 நிமிடம், பாடவளர்ச்சிப் படிமுறைகள் 22 நிமிடம்(4+5+5+4+4) மீளவலியுறுத்தல் 5 நிமிடம், மதிப்பீடு 10 நிமிடம் என வரையறை செய்து கொண்டு வகுப்பறையிற் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பல சிரமங்கள் தவிர்க்கப்படும்.

ஆரம்பபிரிவு (1—5ஆண்டு) வகுப்பு ஒன்றிணைந்த முறை

யில், காலம், பாடம், அலகு/உப அலகு குறிக்கோள், கற்பித்தல் முறை ஆசிரியர் செயற்பாடு அல்லது வழிகாட்டல், கற்பித்தல் துணைச்சாதனங்கள் மாணவர் தொழிற்பாடு மதிப்பீடு மாற்றிக்கற்பித்தல் முதலிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

## ஆரம்ப வகுப்புப் பாடக்குறிப்புப்படிவம் - (மாதிரி)

| காலம் (வாரம் திகதி) | பாடம் | அலகு, உப அலகு | குறிக் கோள் | கற்பித் தல் முறை | ஆசிரியர் செயற் பாடு அல்லது வழிகாட் டல் | கற்பித்தல் துணைச் சாதனங் கள் | மாணவர் தொழிற் பாடு | மதிப்பீடு | மாற்றிக் கற்பித்தல் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

பாடக்குறிப்பில் குறிக்கோளா? நோக்கமா? இடம் பெற வேண்டும் என்பதிற் பல்வேறு சந்தேகங்கள், முரண்பாடுகள் நிலவுகின்றன.

நீண்ட காலத்தின் பின் எதிர்பார்க்கப்படும் பயன்களே நோக்கங்களாகும். நாட்டின் நற்பிரசைகள் உருவாக்கப்படுதல் போன்ற, பல பாடவேளைகளின் பின் ஏற்படக்கூடிய பயன்களே நோக்கங்கள் எனப்படும்.

கல்வி முறையினால்அடையக்கூடிய குறுகிய காலப் பயன்கள் குறிக்கோள் எனப்படும். ஏதாவது



ஒரு பாடத்தினைக் கற்பிப்பதன் ஊடாக அடையப்படுவதே குறிக்கோள். இவ்வாறான பல குறிக்கோள்கள் நிறைவேறும் போது நீண்ட காலப் போக்கிற் கல்வியின் நோக்கங்களை அடைய முடியும்.

பாடத்தைத் திட்டமிடும் போது மாணவர்களிடம் ஏற்படும் நடத்தை மாற்றம் குறிக்கோள் என்ற தலைப்பிற் காட்டப்படல் வேண்டும்.

கற்பித்தற் செயற்பாடுகளுக்கூடாகவே கல்வியின் குறிக்கோளையும் நோக்கங்களையும் அடைய முடியும். திட்டமிடப்பட்ட பாட முன் - ஆயத்தத்தையுடைய பாடக்குறிப்பு ஆசிரியத்துவம் பூரணமடைய வழிவகுக்கும்;

---


மாணவர் | ஆசிரியர்

**நான் விரும்பும் ஆசிரியர்**

பெற்றோர் | அதிபர்

**ஓர் இலட்சிய ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்?**
**எப்படியான ஆசிரியரை நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

மாணவர்களே] பெற்றோர்களே]

ஆசிரியர்களே[ அதிபர்களே!

**உங்கள் கோணத்திலிருந்து உங்கள் கருத்துக்களை எழுதியனுப்புங்கள்**

**பிரசுரமாகும் கட்டுரைகளுக்குச் சன்மானமுண்டு.**

முடிவு திகதி 31-03-1994

அனுப்பவேண்டிய முகவரி:

**விளக்கு**

மருதனார்மடம் சுன்னாகம்.

# ஆக்கி வாயு - புதிய எரிபொருள்

சாரங்கா

**மண்ணெய், பெற்றோல், டீசல் போன்றவை இல்லாமலே, கார், பஸ், உழவு யந்திரம் மின்பிறப்பாக்கி முதலியவற்றை இயங்க வைக்கும் புதிய எரிபொருள் பற்றிய கட்டுரைஇது. நமது தமிழ்ப் பொறியியலாளர்கள் உருவாக்கியகருவியைப் பெற்று, சிரட்டைக்கரியையும் சிறிதளவு வைக்கோலையும் உபயோகித்து நீங்களும் இந்த எரிபொருளை உற்பத்தி செய்யலாம். பாடசாலை நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தலாம்.**

எமது விடுதலைப் போராட்டம் எம்மை மீண்டும் கட்டை வண்டிக் காலத்துக்கே இட்டுச் சென்றுவிடுமோ என்ற குழப்பம்; அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடக் கார் பிடிக்க முடியாத அவலம்; வயலை உழுவதற்கு, நீர் இறைப்பதற்கு பகல் முழுவதும் வெய்யிலில் நின்று கஷ்டப்பட வேண்டுமோ என்ற சோர்வு; பிள்ளைகள் இரவிலே படிப்பதற்கு இனி நிலவைத்தான் நம்பியிருக்க வேண்டுமோ என்ற அச்சம் - நமது மக்களின் உணர்வலைகளை நாம் நன்கு தெரிந்து கொண்டோம். விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் இடைக்கிடை ஏற்படுகின்ற இத்தகைய அச்சங்களைப் போக்கி, அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற வழி செய்வது நமது கடமை என்பதை உணர்ந்தோம். அதன் விளைவே இந்த ஆக்கி வாயுக் கருவி - என்கின்றார் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பிரிவைச் சேர்ந்த திரு. பாப்பா.

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பத்திரிகையாளர்களைத் தனது அலுவலகத்திற்கு அழைத்த



அவர் தொடர்ந்து கூறுகின்றார்- "போர்க்காலத்தில், பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, ஸ்கொத்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் ஆக்கி வாயுவே பெருமளவில் உபயோகிக்கப்பட்டது."

"அரசின் தடைகளும் கண்காணிப்பும் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இந்தக் கருவியை இறக்குமதி செய்ய எப்படி முடிந்தது?" அப்பாவித்தனமான ஒரு கேள்வி பிறக்கிறது.

"இறக்குமதி செய்தோமா?" எனச் சிரித்துக்கொண்டே திருப்பிக் கேட்டுவிட்டு அவர் சொல்கிறார், "நமது தமிழீழத்தைச் சேர்ந்த பொறியியலாளர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இங்கேயுள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தி இதை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கருவியின் புற அமைப்பின் மாதிரிப் படத்தை வெளிநாட்டிலிருந்து பெற்றோம். உள்ளேயுள்ள பாகங்களை உருவாக்கியவர்கள் நமது நிபுணர்களே"

"வெளி நாட்டினர் இதைச் செய்து முடிப்பதற்குப் 18 ஆண்டுகள் எடுத்தன. ஆனால் ஒரே ஆண்டிலேயே நம்மவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள்" எனப் பெருமையுடன் குறிப்பிடுகின்றார் சம்பியன் ஒழுங்கையிலுள்ள அலுவலகத்தில் இதன் செயற்பாட்டுக்குப் பொறுப்பாயிருக்கும் திரு. சோழன்.

மாணவக் களை முற்றும் மாறாத இளந் தொண்டர் சந்திரன் தெளிவான விளக்கங்களுடன் கருவியை இயக்குகின்றார்.

கருவியின் மேற்பகுதியிலுள்ள மூடியைத் திறந்து, போதியளவு சிரட்டைக் கரியைப் போட்டுவிட்டு மீண்டும் அதை மூடுகின்றார். கரி, கொள்கலன் பகுதியை அடைகின்றது. பாதுகாப்பான வேறொரு துவாரத்தினூடாகச் சிறிதளவு நெருப்புத் தணலைப் போடுகின்றார். அத்துடன் "காற்றூதி" என்ற சிறிய கருவியின் கைப்பிடியைச் சுழற்றுகின்றார். சிரட்டைக் கரியில் நெருப்புப் பற்றி, அது தொடர்ந்து எரிவதற்கு, ஆரம்பத்தில் இப்படிச் செய்வது அவசியமாம். பதினைந்து மணித்துளிகளில், வெப்பம் 1000 பாகையாகின்றது.

அதை அறிந்துகொள்வது எப்படி?

அதைப் பரிசோதிப்பதற்கு ஒரு துவாரம் உண்டு. அந்த இடத்திற் சிறு சுள்ளியொன்றை வைத்தால் அதில் நெருப்புப் பற்றும். வெப்பம் 1000 பாகையானவுடன், வாயு உருவாகி ஒரு குழாய்வழியே "வடிகட்டி"க்குச் செல்கின்றது. அதற்குள்ளே இருக்கும் வைக்கோல், வாயு

வில் உள்ள சிரட்டதனையும் தூசியையும் உறிஞ்சி எடுத்து விடும்.

''வைக்கோலா?''

''ஆம், எமது கிராமத்து வயல்களிலுள்ள வைக்கோல் தான். அழுக்குகளை அகற்றும் ஆற்றல் அதற்கு உண்டு'' என விளக்குகின்றார் சந்திரன்.

சுத்தமாக்கப்பட்ட வாயு வேறொரு குழாய் வழியாக நீரிறைக்கும் இயந்திரமொன்றுக்குட் செல்கின்றது.

இவ் வேளையில், இரண்டொரு துளி பெற்றோலை விட்டு நீரிறைக்கும் இயந்திரம் இயங்க (Start) வைக்கப்படுகின்றது. ஆக்கிவாயு, அதன் எரிபொருளாகி அதனைத் தொடர்ந்து இயக்குகின்றது. கணப்பொழுதில், கிணற்று நீர் குழாய் மூலம் கொப்புளித்தபடி வெளியே வருகின்றது.

வியப்புடன் அதைப் பார்த்துக்கொண்டிருந்த பத்திரிகையாளர்கள், மண்டபம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். திடீரென்று மின்விசிறிகள் சுழல்கின்றன. மின்குமிழ்கள் எரிகின்றன: அவர்களின் வியப்பு மேலும் அதிகரிக்கின்றது. எரியும் மின்குமிழ்கள் அணைய தொலைக்காட்சித் திரையில் படம் ஓடுகின்றது.

இவையெல்லாம் எப்படிச் சாத்தியமாகின்றன?

கேள்வி பிறப்பதற்கு முன்னரே, விளக்கம் தெளிவாகக் கேட்கின்றது.

''வடிகட்டி''யிற் சுத்தமாக்கப்பட்ட ஆக்கிவாயு, குழாய் மூலம் மின்பிறப்பாக்கி(generator)யுட் செல்ல, நீர் இறைக்கும் இயந்திரம்போல் அதுவும் தொழிற்படுகின்றது. அதிலிருந்து பிறக்கும் மின்சாரம், மின்குமிழ்களை எரிய வைக்கின்றது: விசிறிகளைச் சுழல வைக்கின்றது: தொலைக்காட்சிப் பெட்டியைச் செயற்படவைக்கின்றது.

கார், பஸ், உழவு இயந்திரம் போன்றவற்றையும் இவ்வாறே இயங்கச் செய்யலாம்.

''இயந்திரங்களிலே ஏதாவது மாற்றங்கள், திருத்தங்கள் செய்ய வேண்டுமா?''- நியாயமான சந்தேகம்.

''இல்லை'' என்கின்றார் திருசோழன். 'ஒரு லீற்றர் மண்ணெய்யின் விலை 18/- ரூபாவாகக் குறையும் வரைக்கும் மண்ணெய்க்குப் பதிலாக ஆக்கிவாயுவை உபயோகிப்பதே சிறந்தது. சிக்கனமானது. ஒரு மணித்தியாலம் தொடர்ந்து வேலை செய்வதற்கு ஒரு கிலோ சிரட்டைக் கரி போதுமானது. மண்ணெய்யின் விலை குறைந்தால், கரியின் விலையும் குறையுந்தானே! ஆகவே தொடர்ந்தும் சிரட்டைக் கரியையே உபயோகிக்கலாம். இயந்திரங்களின் முக்கிய பகுதிகளிற் புகை பிடித்து (Carbon) அவற்றை அழுக்காக்கி விடும்



எனப் பயப்படவுந் தேவையில்லை. அறைகளுக்குள் வைக்காமல் திறந்த வெளியில் இக்கருவியை உபயோகித்தால் எவ்வித ஆபத்தும் யாருக்கும் ஏற்படாது. மூன்று மணி நேரம் தொடர்ந்து இயங்கக்கூடிய கருவியைச் செய்து முடிப்பதற்கு ஐந்து அல்லது ஆறாயிரம் ரூபா போதுமானது. தாவடியிலுள்ள சக்திப் பிரிவில் உங்கள் தேவையைத் தெரிவித்தால் பத்து நாள்களுள் கருவி தயாராகிவிடும். ஓராண்டு காலத்துக்கு உத்தரவாதமும் உண்டு. ஓராண்டு காலத்திற்குள் ஏற்படும் பிழைகள், குறைகளை மேலதிக செலவு எதுவுமின்றி அவர்களே சரியாக்கிக் கொடுப்பார்கள்.

அத்தியாவசியத் தேவை என்கின்ற தாய் எத்தகைய புதுமைக் கருவிகளையெல்லாம் பெற்றெடுக்கின்றாள்! மூளையையும் கையையும் நம்மவர் முறையாக உபயோகித்தால் முடியாதது எதுவுமே இல்லை.

அங்கிருந்து நாம் வெளியேறியபோது நண்பரொருவர்
''தமிழீழத் தாயவள் சேவடியில்
-புதுச்
சக்தி பிறக்குது தாவடியில்''
எனப் பாடியது மிகப் பொருத்தமாகவே தோன்றியது.

---

## அடிகளும் அடியாரும்

''அடிகள்'' என்ற சொல்லின் வரலாற்றை நோக்கினால் அது சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கினால் தமிழில் வழக்குப் பெற்றதாதல் வேண்டும். கடவுளின் தொண்டர்கள் ''அடியார்'' என்று வழங்கப்படுவதே இந்து சமய மரபு. ஆனால், சமணமும் பௌத்தமும் உலகப் பற்றினைத் துறந்த பெருந் துறவிகளுக்கே 'அடிகள்'' என்ற சொல்லைப் பயன் செய்தன. சேர இளவரசரும் சிலப்பதிகார ஆசிரியரும் துறவியுமான இளங்கோ, ''இளங்கோவடிகள்!' எனப்பட்டார். கோவலனையும் மாதவியையும் மதுரைக்கு வழிகாட்டி அழைத்துச் சென்ற பெண்துறவி ''கௌந்தியடிகள்'' ஆனார். இவர்கள் இருவரும் சமணர்கள். காஞ்சி புரத்திலே சமய வீதிகளை ஒழுங்குபடுத்திய பௌத்த துறவி, அறவணடிகள் (இவர் 'மணிமேகலை' யிலும் கதாபாத்திரமாக இடம்பெறுகிறார்) பிற்காலத்திலே சைவ அடியார்களும் இவ்வாறு அழைக்கப்பட்டமைக்குத் திருவெண்காட்டடிகள் (பட்டினத்தடிகள்) வாதவூரடிகள் (மாணிக்கவாசகர்) ஆகியோரின் பெயர்கள் உதாரணங்கள். (திருநாவுக்கரசரை 'அப்பர் அடிகள்' என்று அழைக்கும் வழக்கும் உள்ளது)

டாக்டர் ரா. பி, சேதுப்பிள்ளை

# நீங்களும் நாங்களும்

வணக்கம். அனைவர்க்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். 1993- டிசெம்பரில் வெளிவந்திருக்க வேண்டிய இந்த மூன்றாவது இதழ், எதிர்பாராத சூழ்நிலைகளாற் தாமதமாகி, இப்போது ஜனவரியில் வெளியாகின்றது. ஆகவே இந்த இதழில் டிசெப்பர் - ஜனவரி எனக் குறிப்பிட்டுள்ளோம். மாதத்தின் முதலாந் திகதி யன்றே அந்த மாதத்திற்குரிய இதழை வெளிக்கொணர வேண்டும் என்பது நமது திட்டம். விரைவில் இது சாத்தியமாகும் என நம்புகின்றோம்.

"நாங்களும் எழுதலாமா? எழுதினாற் பிரசுரிப்பீர்களா?" என நேரிலும் கடிதங்களிலும் பலர் கேட்டுள்ளனர். "யாரும் எழுதலாம்; தரமானவை வெளியிடப்படும்" என்பதே நமது பதில். நமது பிரதேசத்திலுள்ள ஒவ்வோர் ஆசிரியரையும், அதிபரையும், அதிகாரியையும் நல்லவராக, திறமைசாலியாக, வினைத்திறன் மிக்கவராக ஆக்குவதற்கு உதவக்கூடிய கருத்துக்களை, ஆலோசனைகளை, திட்டங்களை, தகவல்களை, அனுபவங்களைத் தெளிவாக எழுதியனுப்புங்கள், உங்களால் விடுவிக்க முடியாத கல்வித்துறைச் சிக்கல்கள் இருப்பின் அவை பற்றியும் எழுதுங்கள்.

''விளக்கு'' கல்வியில் ஈடுபாடுடைய அனைவரினதும் சந்திப்புக் களம், கல்வி சம்பந்தமாக ஒன்று சேர்ந்து சிந்திப்பதற்கு, சிந்தனையைப் பரிமாறுவதற்கு, கருத்துக்களை மீள்பரிசீலனை செய்வதற்கு உரிய களம் ''விளக்கு'' என்பதை மீண்டும் நினைவூட்டுகின்றோம். ஆகவே எவ்வித தயக்கமுமின்றி எழுதுங்கள். அறிஞர்களின் மேற்கோள்களுடன் அடிக்குறிப்புக்களிட்டு எழுதப்படுபவை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில்லை. ஆக்கபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், அளவில் அவை மிகவுஞ் சிறியவையாக இருந்தாலுங்கூட, வெளியிடப்படும். இதுவரை இடம்பெற்ற ஆக்கங்கள், புதிதாக எழுத விரும்புவோர்க்கு, வழிகாட்டியாக இருக்கும் என நினைக்கின்றோம்.

''விளக்கு'' பற்றிய உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள். கடிதங்கள் சில இந்த இதழில் வெளியாகியுள்ளன.

''நான் விரும்பும் ஆசிரியர்' பற்றி எழுதுமாறு செனற இதழிற் கேட்டிருந்தோம். நாம் எதிர்பார்த்த அளவிற்குக் கட்டுரைகள்வந்துசேரவில்லை. என்ன என்ன குணங்களுடன் என்ன என்ன திறமைகளுடன் ஆசிரியர் இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்வதுபோல் உங்கள் கட்டுரைகள் அமைய வேண்டும். மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றோர் தத்தம் கோணங்களிலிருந்து தனித்தனியாகக் கட்டுரைகளை எழுதவேண்டும் என விருப்புகின்றோம். நல்லாசிரியர்களைத் தெரிவு செய்து கௌரவிப்பதற்கு உங்கள் கருத்துக்கள் உதவும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு.

**ஆசிரியர்**

# விளக்கு

டிசெம்பர்—93— ஜனவரி-94

## உள்ளே உள்ளவை

கல்வியிலே தன்னிறைவு — ஆசிரியத் தலையங்கம்

கிராமப்புற மாணவனின் சாதனை

முதலிடம் பெறுகிறார் வேம்படி மாணவி

இளமையிற் கல்வி இ. குலசிங்கம்

ஆசிரியர் மாணவர் — க. சொக்கலிங்கம்

வாத்தியார் அழுதார் — வரதர்

பாடசாலைக் கல்வி முறைமை — அ. பஞ்சலிங்கம்

மாலைப் பொழுதினிலே — பூ.க. இராசரத்தினம்

ஓதாமல் ஒருநாளும் — நா.க. சண்முகநாதபிள்ளை

"ஒரு" சில வரிகளில்

தடையற்ற வகுப்பேற்றம்

பல்கலைக் கழக அனுமதி முறை

விவசாயக் கற்கை நெறி — க. இராசதுரை

அர்ப்பணிப்பு — பா. தனபாலன்

பாடக் குறிப்பு — மா.ஞானலிங்கம்

ஆக்கி வாயு — சாரங்கா

நீங்களும் நாங்களும்